# வேத பாரதி செய்திகள்

Tamil Monthly


VEDABHARATHI SEITHIGAL

தமிழ் மாத இதழ்


| மலர்:4 | இதழ்:7 | ஏப்ரல்:2020 | ரூ.10/– | வருட சந்தா:ரூ.100/– |
| --- | --- | --- | --- | --- |
| Volume:4 | Issue:7 | April:2020 | Rs.10/- | Annual Subs: Rs.100/- |





## ஸ்ரீ மஹா மேரு மண்டலி

81/1, மன்னப்பன் தெரு, கோட்டூர், சென்னை – 600 085. தொலைபேசி : 044 – 2447 4744

# சித்ரா பௌர்ணமி திருவிழா – 2020

ஸ்வஸ்தி ஸ்ரீ சார்வரி வருடம் சித்திரை மாதம் 23 மற்றும் 24ம் தேதி **(06.05.2020) புதன்கிழமை மற்றும் (07.05.2020) வியாழக்கிழமை** கீழ்கண்ட நிகழ்ச்சி நிரல்படி ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம குங்குமார்ச்சனை, ஸ்ரீ நவாவரண பூஜை, ஸ்ரீ சண்டி பாராயணம் மற்றும் ஸ்ரீ சண்டி ஹோமம் மற்றும் அபிஷேகங்கள் ஸகிதம் சித்ரா பௌர்ணமி விழா நடைபெற உள்ளன. பக்த கோடிகள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஸ்ரீ அம்பாளின் பரிபூர்ண அனுக்ரஹத்தைப் பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இடம் :

## அருள்மிகு ஸ்ரீ மதுரகாளியம்மன் ஆலயம்

சிறுவாச்சூர், பெரம்பலூர், மாவட்டம்

முன்னிலை :

## ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மதுராம்பிகாநந்த ப்ரஹ்மேந்திர ஸரஸ்வதி அவதூத ஸ்வாமிகள்

### நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| **06.05.2020** | காலை 8.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி | **ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம கோடி குங்குமார்ச்சனை** |
| | மாலை 4.00 மணி முதல் இரவு 8.30 மணி | **ஸ்ரீ நவாவரண பூஜை** |
| **07.05.2020** | காலை 7.30 மணி முதல் 12.00 மணி வரை | **ஸ்ரீ சண்டி பாராயணம் மற்றும் ஸ்ரீ சண்டி ஹோமம்** |

இப்படிக்கு
நிர்வாக அறங்காவலர்
**ஸ்ரீ மஹா மேரு மண்டலி**

**குறிப்பு :** 1. அனுமதிச் சீட்டு வைத்துள்ளவர்கள் மட்டுமே பாராயணம் செய்ய அனுமதிக்கப்படுவர்.
2. பாராயணம் செய்ய அனுமதிக்கப்பட்டவர்களுக்கு உணவு வழங்கப்படும்.

# வேதபாரதி
## செய்திகள்



**காயத்ரீ தேவி**

**வியனுலகனைத்தையும் அமுதென நுகரும்**
**வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம்.** மஹாகவி பாரதி

# அறிவோம் வேதம்

*இந்தப் பகுதியில் ஒவ்வொரு மாதமும் ஒரு வேதமந்திரமும் அதற்குண்டான பொருளும் வழங்கப்படும்.*

**வேதமந்திரம் - 7**

*ஜகம் முழுவதும் ஆத்மனுக்காகவே*

**ப்ரஹ்ம லக்ஷணம்**
**ஸத்1யம் க்ஞாநம் அநந்த1ம்ப்3ரஹ்ம**
**யோ வேத3 நிஹித1ம் கு3ஹாயாம் பர1மே வ்யோமந்**
**- தை1த்தி1ரீய உபநிஷத3ம்.**

*பொருள்:*

*ப்ரம்மம் இருப்பு அறிவு எல்லையொன்றின்மை. அது ஹ்ருதயத்திற்கு உள்ளிருக்கும். அதே வேளையில் அப்பாலுக்கு அப்பாலாயும் விளங்குகிறது. அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய் என்ற ஔவையின் விநாயகர் அகவல் அடிகளை நோக்குக. ப்ரம்மத்தின் லக்ஷணம் ஸத்யம், ஞானம், அநந்தம் என்று இந்த உபநிஷதம் சொல்கின்றது என்றால் என்றும் இருப்பது (ஸத்யம் பரம் தீமஹீ)*

*ஞானம் என்பது அறிவு. ஸ்வரூபம்.ப்ரம்மம் அறியப்படும் பொருள் அன்று; அறிவே ப்ரம்மம். அறிவும் அறியாமையும் அற்ற அறிவே அறிவாகும் உண்மையிது உந்தீபற.*

*அக்ஷரமணமாலை. பகவான் ரமணர்*

*அநந்தம் என்றால் எல்லையற்றது.*

*அநாத்மாக்களிலிருந்து ப்ரம்மத்தை (பரம்பொருளை) பிரித்துக் காட்டுகின்ற லக்ஷணங்கள் இவை.*

*பூஜ்ய ஸ்ரீ ஸ்வாமி பரமாநந்த பாரதி அவர்களின் "தர்மத்தின் குரல்" நூலில் கடவுளைக் காணுவதற்கான "மூன்று சல்லடைகள்" எனும் தலைப்பில் எழுதியுள்ளதை ஊன்றிப் படித்து உணர்க.*

*ஓம் சாந்தி:சாந்தி:சாந்தி:*

# வேதபாரதி செய்திகள்
(ஆன்மீக மாத இதழ்)

மலர்: 4 இதழ்: 7

அச்சிட்டு வெளியிடுபவர்
பதிப்பாளர், ஆசிரியர்
**ஆர்.வெங்கடராமன்**
27, F1 அன்னை இந்திரா நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 94434 95950

அச்சகம்
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
39, மில்லர்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.

**சந்தா விவரம்**

வருட சந்தா ரூ.100
ஆயுள் சந்தா ரூ.1500

சந்தா அனுப்புகிறவர்கள்
**Vedabharathi**
என்ற பெயருக்கு காசோலையை மேற்கண்ட அலுவலக முகவரிக்கு அனுப்பவும். சந்தா புதுப்பிப்பவர்கள் தங்களுடைய சந்தா எண்ணைத் தவறாமல் குறிப்பிடவும்.

வங்கி மூலம் புத்தக சந்தா
நன்கொடை வழங்கிட
**VEDABHARATHI**
**City Union Bank,**
**Velachery Branch**
**A/c No. 510909010005286**
**IFSC : CIUB 0000262**

REGD No : TN/CC(S) / DN / 571 / 18-20
RNI No : 1282188
Title Code : TNTAM/2016/73726
R.Dic.No.1845/2015

**VEDABHARATHI SEITHIGAL**
**(Tamil Monthly Magazine)**
Published on : 1-7th (1st Week) Every Month
TN/PM G (CCR) / WPP 605/19-20 /
Valid from 28.02.2019 to 31.12.2020


# புத்தகத்தின் உள்ளே


| | |
|---|---|
| அட்டைப்பட விளக்கம் | 5 |
| கோசாலை பராமரிப்பு | 6 |
| சித்திரை மாத விசேஷங்கள் | 6 |
| கோமாதாவும் லக்ஷ்மியும் | 7 |
| சுபாஷிதம் | 8 |
| தமிழ்ப்புத்தாண்டு வாழ்த்துக்கள் | 9 |
| நாம ஸங்கீர்த்தனம் | 10 |
| தர்மத்தின் குரல் | 13 |
| புதுவையில் சந்த்யாவந்தன பயிற்சி | 14 |
| ஸ்ரீ ராமநவமியும் தமிழ் வருஷப்பிறப்பும் மறக்கமுடியுமா | 16 |
| ஸ்ரீமத் பகவத்கீதை | 19 |
| சிருங்கேரி மஹா சுவாமிகள் | 21 |
| ஸ்ரீ மஹா பெரியவாளின் வாக்கு | 28 |
| பெற்றோர்களே கவணியுங்கள் | 30 |
| கொரோனா வைரஸ் மூன்றாம் உலகப்போர் | 32 |
| புதுவையில் மகளிர் தினம் | 36 |
| ஊஞ்சல் உட்ச்சவம் 2020 | 41 |
| இன்றைய தலைமுறைக்கு வேதபாரதி | 44 |



புத்தக வடிவமைப்பு :

**ரெம்ஸ் பிரிண்ட்ஸ்**
நெ.17, பாரதி தெரு, இந்திரா நகர்,
காமராஜபுரம், வேளச்சேரி,செ-42.
போன்: 8939000064

நிர்வாக முகவரி:
எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
**Ph : 94434 95950**
**Email:vedabharathichennai@gmail.com**
**Website: www.vedabharathi.org**

# அட்டைப்பட விளக்கம்

## திருமலை - திருப்பதி ஸ்ரீநிவாஸப்பெருமாள் எழுந்தருளி ஸேவார்த்திகளுக்கு ஊஞ்சல் ஸேவையில் அருள்பாலித்தார்கள்

*01.03.2020 ஞாயிறு காலை 8.00 மணி முதல் 1.00 மணி வரை காங்கயம் காடையூர் ஸ்ரீ விவேகானந்தா அகடமியில் திருமலை திருப்பதி ஸ்ரீனிவாசப்பெருமாள் எழுந்தருளி திருமஞ்சனம், புஷ்பயாகம், வேத கோஷம், நாம சங்கீர்த்தனம், ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாம பாராயணம், உபசார பூஜைகள் சிறப்பாக நடைபெற்றன. திருமலை திருப்பதி தாஸ ஸாகித்யா ப்ராஜக்ட் சிறப்பு அதிகாரி ஸ்ரீமான் அனந்தாசார்யார் பகடல் தலைமையில் ஸ்ரீமதி சாந்தி சர்வோத்மன் தாச சாகித்ய ப்ராஜக்ட் அவர்கள் முன்னிலையில் ஊஞ்சல் சேவை சிறப்பாக நடைபெற்றது.*

*4000 க்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தார்கள். வேதபாரதி அமைப்பின் நிர்வாகிகள் வேண்டுகோளின்படி ஸ்ரீ விவேகானந்தா அகடமி பள்ளிச் சிறுமிகள் மாணாக்கர்கள் ஸ்ரீ ஸ்ரீநிவாஸப் பெருமாள் ஸ்வாமிகளைப் பற்றி தமிழ், தெலுங்கு, கன்னட மொழிகளில் பாடல்கள் பாடி பேரருள் பெற்றார்கள். 29.02.2020 அன்று மாலை கரூரில் இருந்து ஸ்வாமி புறப்பட்டு காடையூர் வந்தவுடன் பெருமாளுக்கு பள்ளி நிர்வாகிகள் பூர்ணகும்ப மரியாதை வழங்கி ஸ்வாமியை வரவேற்றார்கள். பெற்றோர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு வரவேற்பு கொடுத்தார்கள். நாதஸ்வர இசை, பூர்ண கும்பம், வேத பாராயணம் செய்து வரவேற்பு மிக சிரத்தையுடன் ஏற்பாடுகள் செய்திருந்தார்கள். பள்ளிச் சிறுமிகளின் கோலாட்ட நிகழ்ச்சி வெகுவாக வரவேற்பு பெற்றது.*

தொகுப்பு **ஆசிரியர்**

# கோசாலை பராமரிப்பு

வேதபாரதி அன்பர்கள் சார்பாக கோசாலை உழவாரப்பணி செய்ய ஆர்வமுள்ள குடும்பத்தினர்கள் 16.01.2020 அன்று மாட்டுப்பொங்கல் **ஸ்ரீ கோகுல கிருஷ்ணா கோசாலா தேவந்தவாக்கம் கிராமம் ஊத்துக்கோட்டை வட்டம், திருவள்ளூர் மாவட்டம்** சென்று அங்குள்ள மாடுகளை சுத்தம் செய்து கொண்டாடி மகிழ்ந்தார்கள். மிகச்சிறந்த முறையில் இந்த உன்னதமான பணியை செய்து வரும் ஸ்ரீ கோகுல கிருஷ்ணா கோசாலா நிர்வாகத்தினருக்கு மனமார்ந்த பாராட்டுகள். மிக்க கடினமான பணி. 400க்கும் மேற்பட்ட பசுக்கள் உள்ளன. ஆனால் மிக உன்னதமான பணியினை எடுத்து நடத்திவருகிறார்கள்.

மேலும் பசுப்பொருட்கள் தயார் செய்து வழங்குகிறார்கள். அன்பர்கள் நேரில் சென்று பார்வையிடவும். கோ பூஜையில் கலந்து கொண்டு பயனடையவும் அணுக வேண்டிய தொலைபேசி எண் : **89402 24744.**

## சித்திரை மாத விசேஷங்கள்
### (ஏப்ரல் 14.04.2020 முதல் மே 14.05.2020 வரை)

| | | | |
|---|---|---|---|
| 14.04.2020 | சி 1 | செவ்வாய் | தமிழ் வருடப்பிறப்பு |
| 18.04.2020 | சி 5 | சனிக்கிழமை | ஏகாதசி |
| 19.04.2020 | சி 6 | ஞாயிற்றுக்கிழமை | துவாதசி |
| 20.04.2020 | சி 7 | திங்கட்கிழமை | ஸ்ரீ ரமண மகரிஷி ஆராதனை |
| 22.04.2020 | சி 9 | புதன் கிழமை | அமாவாசை |
| 25.04.2020 | சி 12 | சனிக்கிழமை | பலராம ஜயந்தி, ஸ்யாமா சாஸ்திரிகள் ஜென்ம தினம் |
| 26.04.2020 | சி 13 | ஞாயிற்றுக்கிழமை | அக்ஷயதிருதியை |
| 27.04.2020 | சி 14 | திங்கட்கிழமை | வார்த்தர கௌரி விரதம் |
| 28.04.2020 | சி 15 | செவ்வாய்கிழமை | ஸ்ரீ சங்கரர் ஸ்ரீ ராமானுஜர் ஜெயந்தி |
| 02.05.2020 | சி 19 | சனிக்கிழமை | ஸ்ரீசதாசிவப்ரும்மேந்திரர் ஆராதனை |
| 03.05.2020 | சி 20 | ஞாயிற்றுக்கிழமை | ஏகாதசி |
| 04.05.2020 | சி 21 | திங்கிட்கிழமை | அக்னிநட்சத்திரம் |
| 07.05.2020 | சி 24 | வியாழக்கிழமை | சித்ராபௌர்ணமி |
| 09.05.2020 | சி 26 | சனிக்கிழமை | அனுஷம் |

**சென்ற மாத புத்தகத்தில் பங்குனி மாத விஷேசங்களில் பிழைகள் இருந்தன. அதற்கு வேதபாரதி மாத இதழின் சார்பில் வருத்தத்தை தெரிவித்துக்கொள்கிறோம்.**

# கோமாதாவும் லக்ஷ்மியும்

ஸர்வ தேவதா ஸ்வரூபம் என்றால் நம்முடைய சிற்றறிவால் இன்னதென்று கிரஹித்துக் கொள்ள முடியாமல் அல்லவா இருக்கிறது? ஒரே மலைப்பாக - பயம் கலந்த மலைப்பாக - இருக்கிறதே தவிர அன்போடு பக்தி பண்ணும்படியாக இல்லையே' அதனால் கோமாதாவைக் குறிப்பாக லக்ஷ்மி என்ற ஒரு தேவதையின் ஸ்வரூபமாகச் சொல்வது. அமர(கோச)ம் என்கிற ஸம்ஸ்க்ருத நிகண்டுவில் (அகராதியில்) லக்ஷ்மியின் பல பெயர்களைச் சொல்லும் போது 'லோகமாதா', 'லோகஜனனி' என்னும் இரண்டு பெயர்கள் சொல்லியிருக்கிறது கோமாதா அந்த லோகமாதாவே.

கோமாதாவை லக்ஷ்மி என்கிறது ஒரு பக்கம். அவளை லக்ஷ்மியின் வாஸ ஸ்தானமாகச் சொல்வது இன்னொரு பக்கம். லக்ஷ்மிக்கு வாஸ ஸ்தானங்கள் ஐந்து. ஸுமங்கலியின் வகிடு, மலர்ந்த தாமரைப் பூவின் உள்பக்கம். யானையின் மஸ்தகம் (தலை) வில்வ பத்ரத்தின் பின் பக்க ரேகை ஆகிய நாலோடு பசுவின் பின்புறமும் ஐந்தாவதாக மஹாலக்ஷ்மியின் வாஸமாக இருக்கிறது. கோவிடத்தில் எதிரிடைகள் சேர்கிறதில் கோமய, கோமூத்ரங்களும் பவித்ரமாக இருப்பதாகப் பார்த்தோமல்லவா? அப்படியேதான் அதன் முக மண்டலமாக இல்லாமல் ப்ருஷ்டபாகமாக இருக்கப்பட்ட பின்புறமும் பரம பவித்ரமாக லக்ஷ்மீவாஸமாக இருக்கிறது. அழகுக்காக கோவின் முகத்தில் சந்தன குங்குமங்கள் இட்டுக் கழுத்தில் மாலை போட்டாலும், கோபூஜை என்று பண்ணும் போது பின்புறத்தை அலங்கரித்து அங்கேயே அர்ச்சனாதிகள் செய்ய வேண்டும். ஒரு கோவிடம் நிக்ருஷ்டமானது (தாழ்ந்தது)என்று எதுவுமேயில்லை. அதனிடம் ஸர்வமும், ஸர்வாங்கமும் உத்ருஷ்டமே (உயர்ந்தனவே). தர்மபீடங்களில் ப்ரதிதினமும் காலம் கார்த்தாலே நடக்கிற முதல் வழிபாடு கோபூஜைதான் என்பதிலிருந்து கோவுக்குள்ள உத்ருஷ்டமான ஸ்தானத்தைப் புரிந்து கொள்ளலாம். பசுவைவிட யானை எவ்வளவோ பெரியதாக இருந்தாலும் கோபூஜைக்கு அப்புறந்தான் கஜபூஜை.

**கோபூஜை செய்வோம்!**

# சுபாஷிதம் - 17

**"சுபாஷிதம்"** *என்பது சொல்வதற்கு இனிமையான ஸ்லோகங்கள். இத்தகைய ஸ்லோகங்களின் பொருள் எவரையும் கவரும். சிறு குழந்தைகளுக்கு இத்தகைய நல்லுரைகளை கற்றுத்தருவதால் எதிர்காலத்தில் அந்த மாணவனின் மனவளம் செம்மையாக அமைவதோடு அவன் பலருக்கு வழிகாட்டியாக எடுத்துக்காட்டாக விளங்குவான்.*

**சைலே சைலே ந மாணிக்யம் மௌக்திகம் ந கஜே கஜே**
**ஸாதவோ ந ஹி ஸர்வத்ர சந்தனம் ந வனே வனே**

*மாணிக்கம் எல்லா மலைகளிலும், ஆணிமுத்து எல்லா யானைகளிலும் சந்தனம் எல்லா வனங்களிலும் எப்படிக் கிடைப்பதில்லையோ அது போலத்தான் நன்மக்களும்.*

**கிம் அபி அஸ்தி ஸ்வபாவேன ஸுந்தரம் வா அபி அஸுந்தரம்**
**யத் ஏவ ரோசதே யஸ்மை பவேத் தத் தஸ்ய ஸுந்தரம்**

*இயல்பிலேயே அழகானதோ அழகற்றதோ இவ்வுலகில் எதுவுமில்லை. எந்த ஒரு பொருளும் அது விரும்பப் படுகையில் அழகானதாகி விடுகிறது.*

**புதித: ப்ரபாவ: தேஜஸ்ச்ச ஸத்வமுத்தானமேவச**
**வ்யவஸாயஸ்ச்ச யஸ்யாஸ்தி தஸ்ய வ்ருத்திபயம் குத:**

*அறிவு, தியாகம், பொலிவு, வலிமை, உற்சாகம், உழைக்கும் ஈடுபாடு இவற்றை உடையவனுக்கு எப்படி வாழப் போகிறோமோ? என்ற அச்சம் இருப்பதில்லை.*

தொகுப்பு : **பரிதி**

*இந்தப் பகுதி தொடர்ந்து வெளிவர*
*நிதிஉதவி செய்து வருபவர்*
**ப்ரம்மஸ்ரீ முனீஸ்வர சாஸ்திரிகள்,** வேளச்சேரி

# தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

வேதபாரதி செய்திகள் சார்பாக வாசகர்கள், கட்டுரை எழுத்தாளர்கள், புத்தகக்குழு உறுப்பினர்கள், விளம்பரதாரர்கள் அனைவருக்கும் **சார்வரி வருஷ புத்தாண்டு வாழ்த்துக்கள்**. எல்லா நலமும் வளமும் பெற்று ஆரோக்யத்துடன் வாழ ப்ரார்த்திக்கின்றோம். உலகை அச்சுறுத்தும் கொரோனா என்னும் நோய் தொற்று கண்டு உலக மருத்துவ விஞ்ஞானிகளே பதறுகிறார்கள். மனித சமூகத்திற்கு பெரிய சவாலாக உள்ளது. உலகம் முழுவதும் அணு ஆயுதங்களை பெருக்கி தன்னை வல்லரசாக நிருபிக்க துடிக்கும் நாடுகள் மனித சமூகம் தொற்று நோய் வைரஸ்களுக்கு மாற்று வைரஸ்களை கண்டு பிடிக்க பெரும் நிதி ஒதுக்க வேண்டும்.

பாரத கலாச்சாரத்தில் கை கூப்பி வணக்கம் வைத்தல், மா இலை கட்டுதல், மஞ்சள் பிள்ளையார் வைத்து வணங்குதல், ஆரத்தி எடுத்தல், வாசல் தெளித்து சாணம் பூ வைத்தல், கோடை காலங்களில் வேப்பிலை வைத்து காப்பு கட்டுதல், ஊர் எல்லை தாண்டாதிருத்தல் சித்திரை ஒன்றுக்கு வேம்பு பூ ரசம் வைத்து உணவு சாப்பிடுதல் அனைத்தும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை, பல நூற்றாண்டு காலமாக நம் முன்னோர்கள் நம் நாட்டு தட்ப வெட்ப நிலைக்கு ஏற்றார் போல் ஏற்பாடுகள் செய்து வைத்துள்ளார்கள். நாம் புதிதாக எதையும் செய்ய வேண்டாம். நம் பாரம்பர்ய உணவு முறை, ஆசாரம் கடைபிடிப்போம் நல்வாழ்வு வாழ்வோம்.

இந்த ஆண்டு ஏப்ரல் 14-ல் துவங்க உள்ள சார்வரி வருஷம் எல்லோருக்கும் எல்லா நலன்களையும் வழங்கி நல்வாழ்வு வாழ வேதபாரதி எல்லாம் வல்ல பரமேஸ்வரனை பிரார்த்தனை செய்கிறது.

**சுத்தம் காப்போம், சுகாதாரமாக இருப்போம்.**

**நம்பிக்கையே வாழ்க்கை.** ஆசிரியர்.

Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39, Millers Road, Kilpauk, Chennai - 600 010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 42.
Editor : **R. VENKATARAMAN, 9443495950**

# நாம ஸங்கீர்த்தனம்

புண்யமான பாரத பூமியில் பிறந்தவர்கள் பரம பாக்யசாலிகள். அறிவுடைய மனித பிறப்பை அடைவது மிக அரிது. அவர்களுக்கு வழிகாட்டியான ஆதார நூல் வேதங்களே. வேதத்திற்கு மேலான தர்மநூல் கிடையாது. மனிதர்கள் கடைமைகளை செய்து பகவானை அடைய வேதங்களில் மூன்று வழிகள் கூறப்பட்டிருக்கின்றன. அவை கர்மம், ஞானம், பக்தி. அவரவர் ஆசிரம தர்மங்களை அனுஷ்டித்து யாகம், ஹோமம் செய்வது கர்ம காண்டமாகும். கலியுகத்தில் யாகம் செய்வது இயலாதது. ஞானமாவது வேத வேதாந்தங்கள் கற்று ப்ரும்ம விசாரம் செய்து துறவறத்தால் பகவானை அடைவது. அதுவும் மிக கஷ்டமானது. பக்தி என்பது மனிதனாக பிறந்தவர்கள் எந்த இனமாக இருந்தாலும் யாவரும் கடைபிடிக்கலாம்.

கலியுகத்தில் நாம ஸங்கீர்த்தன வடிவமான யாகந்தான் சிறந்தது என்று ஸ்ரீமத் பாகவதத்தில் உபதேசிக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு சிறப்பான பக்தியை பாரத தேசத்தில் எல்லா பாகங்களிலும் பல பல மஹான்கள் திருவதாரம் செய்து பரப்பினார்கள். வங்காளத்தில் ஸ்ரீ சைதன்ய மகாபிரபு எல்லா சாஸ்திரங்களின் முடிவும் பகவன் நாமந்தான் என்றார். கபீர்தாஸ் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையுடன் நாம பிரசாரம் செய்தார். மீராபாய் ராஜபுத்ர வம்சத்தில் அரச குடும்பத்தில் பிறந்து கிருஷ்ண பக்தியுடன் பிருந்தாவனத்தில் கிருஷ்ணனுடன் நித்ய லீலை செய்கிறாள். மஹாராஷ்டிர தேசத்தில் துகாராம் சுவாமிகள் 4 கோடி அபங்கம் பாடி ஸ்தூல சரீரத்துடன் வைகுண்டம் சென்றார். ஆந்திர தேசத்தில் பத்ராசல ராமதாஸ் சுவாமிகள் ஸ்ரீ ராமசந்திர மூர்த்தியை ஆயிரக்கணக்கான தெலுங்கு கீர்த்தனைகள் பாடி அருளினார்.

தமிழ்நாட்டில் போதேந்திர ஸ்வாமிகள், ஸ்ரீதர வெங்கடேச அய்யாவாள் அவதரித்து நூற்று கணக்கான ஸ்லோகங்களினால் ராமநாம, சிவநாம மஹிமைகளை நிலைநாட்டினார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டில் மருதாநல்லூர் ஸ்ரீ சத்குரு சுவாமிகள் பஜனை சம்பிரதாயத்தை தொகுத்து அருளினார். அந்த முறையில்தான் நம்நாட்டில் பஜனை நடைபெறுகிறது. இந்த கட்டுரையில் தமிழகத்தில்

தோன்றி பக்தி சாம்ராஜ்ஜியத்தில் திளைத்து நமக்கு தெளிவான வழிகாட்டிய மூவரைப்பற்றி பார்க்க உள்ளோம்.

ஸ்ரீ பகவன் நாம போதேந்திர ஸ்வாமிகள்

இந்தியாவில் புரந்தரதாஸர், கனகதாஸர், ராமதாஸர், க்ஷேத்ரக்ஞர், ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர், துகாராம், கபீர், துளஸிதாஸ், ஸ்வாமி ஹரிதாஸ், ஸ்ரீ வல்லபர், குருநானக், குருகோவிந்த்சிங், மீரா முதலியவர்கள் அவதரித்த காலகட்டத்தில் காஞ்சி மாநகரத்தில் கேசவபாண்டுரங்க யோகி, ஸுகுணா தம்பதியருக்கு போதேந்திர ஸ்வாமிகள் அவதரித்தார். குழந்தை புருஷோத்தமன் என்னும் நாமத்துடன் வளர்ந்துவந்தான். தந்தையுடன் ஸ்ரீமடம் சென்று வருவான். அப்போது மடாதிபதியாக விளங்கிய விஸ்வாதிகேந்த்ரர் குழந்தையை மடத்துக்கு தர இயலுமா என்று கேட்க தம்பதியினர் மனமொப்பி அளித்தனர். ஏழுவயதில் உபநயனம் செய்விக்கப்பட்டு பதினாறு வயதுக்குள் வேதம், வேதாந்தம் கற்று ப்ரகாசித்தான். எல்லா சாஸ்திரங்களின் சாரம் நாராயண த்யானமே என்று உணர்ந்து ப்ரதி தினமும் லட்சத்து எட்டாயிரம் ராம நாம கீர்த்தனம் செய்வதாக ஆசார்ய ஸன்னதியில் ப்ரதிக்ஞை செய்து கொண்டு அவ்வாறேசெய்து வந்தான்.

விஸ்வாதிகேந்த்ரர் ஸ்வாமிகள் ஒரு சந்தர்ப்பத்தில் அநேக வித்வான்களின் சபையில் அநேகராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட போதேந்திர ஸ்வாமிகளை அடுத்த பீடாதிபதியாக (59வது) பட்டாபிஷேகம் செய்வித்தார். ஸேதுயாத்திரை செல்லும் வழியில் திருப்பாதிரிபுலியூரில் மஹாசமாதி அடைந்த குருவிற்கு ப்ருந்தாவனம் அமைத்துவிட்டு காஞ்சிபுரம் திரும்பிவிட்டார்.

பல காலங்களுக்கு பிறகு குரு விட்ட பணியை தொடர எண்ணி ஸேதுயாத்ரை சென்றுவிட்டு திரும்பும் வழியில் கும்பகோணம் அருகில் தங்கியிருக்கும் போது மக்களின் நாம ஸங்கீர்த்தன ஈடுபாடு அவரை கவர, திருவிடைமருதூரில் கோயில் ப்ரகாரத்தில் தங்கி திருவிசநல்லூரில் இருந்து தினசரி வந்துபோகும் ஸ்ரீதர ஐயாவாளை தரிசித்தார். அவரோடு பல வருடங்கள் கலந்து பேசி, பல இடங்களுக்கு சென்று நாம சங்கீர்த்தனம் செய்து மக்களுக்கு பக்தி உணர்ச்சியை பெருக்கினார்கள். திருவிடைமருதூர் மஹாலிங்கஸ்வாமியுடன் ஸ்ரீதர ஐயாவாள் இரண்டறகலந்தபின்பு எங்கும் செல்வதை தவிர்த்து

கோவிந்தபுரத்திலேயே தங்கி இருந்தார்.

கோடைகாலத்தில் குழந்தைகளுடன் காவிரி ஆற்றில் விளையாடும் போது மணல் பறிக்கப்பட்ட பள்ளத்தில் அமர்ந்து கொண்டு தன்மீது மணலை கொண்டு மூடபணித்தார். மறுநாள் சிஷ்யர்கள் ஸ்வாமிகளை காணாமல் தவித்த போது குழந்தைகள் மூலம் விபரம் அறிந்து மணலை தோண்ட முற்பட்ட போது அசரீரியாக இங்கு இருக்க விரும்புகிறோம். முயற்சியை கைவிடுங்கள் என்று அறிவித்தார். இது நடந்தது கி.பி.1692 ஆண்டு. இப்போதும் கோவிந்தபுரத்தில் உள்ள அதிஷ்டானத்தில் பௌர்ணமியில் இருந்து மஹாளய அமாவாசை வரை பதினைந்து நாட்கள் ஆராதனா உற்சவம் கோலாகலமாக நடைபெற்று வருகிறது. பகவன்நாம போதேந்திர சுவாமிகள் எப்போதும் ஜீவ சமாதியில் இருந்து கொண்டு அனுக்ரஹம் செய்து வருகிறார்.

தொடரும்...

**ஸ்ரீ ராமன்,** வேளச்சேரி,



# யுவஸ்ரீ வாழ்வியல் பயிலரங்கம்

**பாண்டிச்சேரி**

**தேதி பின்னர் அறிவிக்கப்படும்**

**நேரம் : காலை 9.30 மணி முதல் மாலை 3.30 மணி வரை**

**விளையாட்டுப்போட்டி, பேச்சுப்போட்டி கருத்தரங்கம்**

**12 வயதுக்கு மேல் உள்ள திருமணமாகாத அந்தண பெண் குழந்தைகள் கலந்து கொள்ளலாம்.**

**விளையாட்டுப்போட்டி** : பாண்டி, தாயம், பல்லாங்குழி, பரமபதம்

**பேச்சுப் போட்டி** :
- என் குடும்ப பெருமை
- நட்புக்கும் உறவிற்கும் ஆன புரிதல்
- குல தெய்வம் வழிபாடு

சிறப்பு அழைப்பாளர்களும், சமூக ஆர்வலர்களும் கலந்து கொண்டு ஆசியுரை வழங்க உள்ளார்கள்.

பரிசுகள், பாராட்டுகள், வாழ்த்துக்கள் பெற அன்புடன் அழைக்கிறோம்.

முன்பதிவு அவசியம்

**வேதபாரதி**
புதுவை

# தர்மத்தின் குரல்
# பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்

*அத்தியாயம் 2 : மறுபிறப்பு*

## 2.15. இன்னும் சில கேள்விகள்: (தொடர்ச்சி)

*15. "இறப்பின் போது ஏற்படுகிற மூன்றுவிருத்திகள், அடுத்த பிறவியை நிர்ணயிக்கின்றன என்று சொல்லியிருக்கிறீர்கள். கடைசி நேரத்தில் ஒரு அசாதாரணமான நிலை தோன்றி, அது விருத்திகள் உருவாவதை மாற்ற முடியுமா?*

முடியாது. எற்கனவே செய்துள்ள கர்மாக்கள் தான் விருத்திகளை நிர்ணயிக்கின்றன. உண்மையிலேயே, அந்த நேரத்தில் விருப்பத்திற்கு ஏற்ப, விருத்திகளை மாற்றிக் கொள்ள முயல முடியாது.

*"ஆனால் விளைவுகளைப் பற்றியெல்லாம் கவலைப்படாத வாழ்க்கை வாழ்ந்த அஜாமிளன் கடைசி நொடியில் கடவுளை நினைத்து ஸ்வர்கம் சென்றதாக கேள்விப்படுகிறோமே, அதெப்படி? மேலும் முனிவரான ஜடபரதர், கடைசி நேரத்தில் தான் வளர்த்துக் கொண்டிருந்த மானை நினைத்து மானாகவே மறு பிறவி எடுத்தார். இதெப்படி?"*

ஜடபரதரின், மானின் மீதான நெடுங்காலப் பாசமே, அவரின் கடைசி விருத்திக்கு ஏற்ப மானாக அவர் பிறக்கக் காரணமாயிற்று. அஜாமிளன், விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாத வாழ்க்கை வாழ்ந்தது வாஸ்தவம்தான். ஆனால் அவன், மனத்தின் ஆழங்களில் அதற்காக வருந்தவே செய்து கொண்டிருந்தான். இவ்வாறாக, அவன் சரீரம் தவறான செயல்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாலும், அவன் மனது எப்பொழுதும் கடவுள் நாராயணன் மீதே நிலைத்திருந்தது. அஜாமிளனின் மனத்தில் வாசம் செய்து கொண்டிருந்த நாராயணன்; அஜாமிளனின் புறத்தே நிகழ்ந்த கெட்ட கர்மாக்களைவிட, அவனின் மனத்தில் நிகழ்ந்த தவம், மிகவும் வலிமையானது என்பதைக் கண்டார். இந்த வலிமை மிக்க கர்மாக்களுக்கு ஏற்ப, அவனுக்கு கடைசி விருத்திகளைத் தந்தார்.

....தொடரும்

# புதுவையில் சந்த்யாவந்தன பயிற்சி

*"வேதபாரதியின்" மூச்சுக்காற்று என்றால், அது, ஒவ்வொரு அங்கத்தினரையும் நித்திய கர்மாவான "சந்த்யாவந்தனம்" செய்ய வைப்பதே! பணி நிமித்தம் மற்றும் வேலைப்பளு போன்ற காரணங்களால், நித்திய கர்மா செய்ய முடியாது. அந்த வழிமுறையையே பலர் மறந்துபோயுள்ளனர்.*

*அவர்களுக்கான, உந்து சக்தியாகவும், வழிகாட்டியாகவும் இருக்கும் "வேதபாரதி" பிரதி வருடம் சந்த்யாவந்தன பயிற்சியை சிறுவர்கள், பெரியவர்கள் என அனைவருக்கும் வேத விற்பன்னர்கள் மூலம் கொடுத்துவருகிறது.*

*இந்தாண்டிற்கான பயிற்சி எதிர்வரும், மே 1,2,3 2020 வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் புதுவையில் நடைபெறவிருக்கிறது. இதற்கான ஆலோசனைக் கூட்டம் கடந்த 15.03.2020 ஞாயிறன்று புதுவையில், வேதபாரதி தலைவர் திரு.ரமேஷ் அவர்களின் இல்லத்தில் "அனுஷம்" ஹாலில் நடைபெற்றது. துணைத்தலைவர் அட்வகேட் பட்டாபிராமன், செயலர் சந்திரசேகரன் உள்ளிட்ட 40க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு, இந்த முகாம் சிறப்பாக நடைபெறுவதற்கான ஆலோசனைகளை வழங்கினார்கள்.*



*இந்த பயிற்சியில் சுமார் 250க்கும் மேற்பட்டோர் கலந்து கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கும் வேதபாரதிக்கு,*

அதற்கான முழு ஒத்துழைப்பை கொடுத்து பெரும்பாலானோர் மத்தியில் இச்செய்தியை சேர்ப்பதாக ஆலோசனை கூட்டத்தில் கலந்து கொண்டோர் தெரிவித்தனர்.

இந்த ஆலோசனை கூட்டத்தில் தலைமை ஏற்று சிறப்புரை ஆற்றிய, தமிழக செயலர் திரு.வெங்கட்ராமன் ஜி, தமிழ்நாடு வேதபாரதி சார்பாக, புதுவை வேதபாரதியின் வேண்டுகோளை ஏற்று தன்னலங்கருதாது வேதத்திற்கு சேவையாற்றி அமரரான ப்ரம்மஸ்ரீ, பாலு சாஸ்திரிகள் குடும்பத்திற்கு நிதியுதவிக்கான காசோலையை வழங்கினார். அக்கூட்டத்தில் இது ஒரு நெகிழ்ச்சியான நிகழ்வாக இருந்தது. மேலும், புதுவை "சக்தி வேதபாரதி" அங்கத்தினர்களுக்கு அடையாள அட்டைகளை தன்கரங்களால் வழங்கி பெருமை சேர்த்தனர்.

சந்த்யாவந்தன பயிற்சி முகாம் சிறப்புற நடைபெற மஹா பெரியவாளை பிரார்த்தித்து இனிதே நிறைவுற்றது. ஆலோசனை கூட்டம்.

- ஆதிரையன்.

# வேதபாரதி

வேதபாரதி சார்பில் கொரோனா தொற்று நோயிலிருந்து உலக மக்கள் விடுபட 28.03.2020 அன்று 1008 ஆவர்த்தி ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாம பாராயணம் செய்வது என்று ஸங்கல்பம் செய்து கொண்டு வேதபாரதி அன்பர்கள், இதற்கு என்று ஓர் Whats App Group ஆரம்பித்து ஸேவார்த்திகள் பாராயணம் செய்து பதிவு செய்ய ஏற்பாடுகள் செய்திருந்தனர். வேதபாரதி குழுவின், சிறந்த தெளிவான சரியான முயற்சியால் 6000 க்கும் மேற்பட்ட ஆவர்த்திகள் பாராயணம் செய்யும் பெரும் பேறு பெற்றோம். மேலும் 04.04.2020 ஸர்வ ஏகாதசீ அன்று தமிழ்நாடு, கர்னாடகா, மும்பை போன்ற நகரங்களில் உள்ளவர்கள் குழு அமைத்து நாள் முழுவதும் தொடர் விஷ்ணு ஸஹஸ்ர நாம பாராயணம் செய்து பிரார்த்தனை செய்தோம். பகவான் பேரருள் முயற்சி தொடரும்.

# ஸ்ரீ ராம நவமியும் தமிழ் வருஷப் பிறப்பும்! மறக்க முடியுமா?

*ஸ்ரீ ராம நவமியும் தமிழ் வருஷப் பிறப்பும் இந்த மாதத்தில், ஆண்டு தோறும் ஏப்ரல் வரும்போது, என் நினைவுகள் பின்னோக்கி என் பள்ளிப் பருவத்திற்குப் போய்விடும் வாருங்கள். உங்களையும் அழைத்துப் போகிறேன்.*

*அன்பான குடும்பம், அழகான வீடு, வீடு கொள்ளா மனிதர்கள், ஜே ஜே என்று வருவோர் போவோர், தினந்தோறும் கோவில் போல் திருவிழாக்கள், பூஜை புனஸ்காரங்கள்! அதுவும் விசேஷ தினங்களும் சேர்ந்துவிட்டால் அந்த அன்பு இல்லம் பேரானந்த பெருங்கோவில் ஆகிவிடும். சைவ வைஷ்ணவ பேதங்களும், ஜாதி பேதங்களும் இல்லாத சர்வ சம்மத திருக்கோவில் அந்த வீடு, பார்வதி பரமேஸ்வரனாய் தாத்தாவும் பாட்டியும், பரிவார தெய்வங்களாய் மகன்களும் மருமகள்களும், அடியார்களாய் பேரன் பேத்திகள், அடியார்க்கு அடியார்களாய் பணியாளர்கள், மிகைப்படுத்தலாய் உங்களுக்குத் தெரிந்தால், அப்படி ஒரு வாழ்க்கை உங்களுக்கு அமையவில்லை என்று என்னால் புரிந்து கொள்ள முடியும். எனக்கு அந்த கொடுப்பினை கொஞ்சம் இருந்திருக்கிறது.*

*அப்படி ஒரு அன்பு இல்லத்தில் ஸ்ரீ ராம நவமியும் தமிழ் வருஷப் பிறப்பும் எப்படி இருக்கும் தெரியுமா?*

*முதல் நாளே வீடு திமிலோகப்படும். தெய்வங்களெல்லாம் அபிஷேக அலங்காரங்கள் செய்யப்பட்டு, புத்தாடை பூண்டு, புன்னகையோடு காத்திருப்பார்கள் ஆசீர்வதிக்க.*

*மனித தெய்வங்களும், ஆச்சார அனுஷ்டானங்களுடன் அவரவர்களுக்கான பாரம்பர்ய உடைதரித்து, நெற்றி நிறைய திருநீறும், உதட்டில் ஸ்ரீ ராம நாம உச்சரிப்புகளுடன் வாசலில் வரவிருக்கும் பாகவதப் பெரியோர்களை வரவேற்க ஏற்பாடுகளில் மிகவும் மூழ்கி இருக்க, வீட்டுப் பெண்கள் மங்கலகரமாய் நெற்றி நிறைய வட்டக் குங்குமம் கூந்தல் நிறைய*

மல்லிகைப் பூவும் சூடி, பளிச்சென்று மடி உடை உடுத்தி, நீர்மோர், பானகம், வடை பருப்பு, பாயாசம், வடைகளை தயாரித்து வைத்துவிட்டு, குடங்களில் நீர் நிரப்பி இடுப்பில் வைத்துக் கொண்டும், புஷ்ப அக்ஷதை தட்டுக்களுடனும் பேரன் பேத்திகளைக் கையில் பிடித்து இழுத்துக்கொண்டு, வாசலில் வந்து காத்திருக்க, ஸ்ரீ ராம சங்கீர்த்தனத்துடன் உஞ்சவிருத்தி பாகவதரும் (ஸ்ரீ கோபால கிருஷ்ண பாகவதர்) அவரது குழுவினரும், வீட்டு வாசலில் போடப்பட்டிருக்கும் காவி பூசிய வெண்கோலத்தின் மையத்தில் வந்து நின்று மெய்மறந்து இசைத்துக் கொண்டிருப்பார்கள்.

பாட்டியுடன் மருமகள்கள் அனைவரும் ஒருவர் பின் ஒருவராய் பாகவத சிரோத்தமர்களின் பாதங்களுக்கு நீர் ஊற்றி, மலர்களும் அக்ஷதையும் சமர்பித்து, பொதுவழிச் சாலை என்ற சங்கோஜம் துளியுமின்றி, ஈர மண்ணில் விழுந்து நமஸ்காரம் செய்து பிரதட்சிணம் வரும்போது, பரிவார தெய்வங்களும், அடியார்களும் அடியார்க்கு அடியார்களும் கூட பாகவதர்களை வலம் வந்து ஆசிகள் பெறுவார்கள். பாகவதர்கள் வீட்டுக்குள் பிரவேசித்து, கூடம் நிறைய விரிக்கப்பட்டிருக்கும் ஆசனங்களில் அமர்ந்து, ஸ்ரீ ராம சங்கீர்த்தனத்தை தற்காலிக முடிவுக்கு கொண்டு வந்துவிட்டு, நீர் மோர் பானக இத்யாதிகளையும் வஸ்திர தாம்பூலங்களையும் ஏற்றுக்கொண்டு, மகோன்னதமான ஆசீர்வாதங்களை வழங்கிவிட்டு விடை பெறுவார்கள்.

பிறகு ஆரம்பிக்கும் ஒரு ஆனந்தம்! குடும்பத்தினர் ஒவ்வொருவரும் போட்டி போட்டுக்கொண்டு ஸ்ரீ ராம நாமம் எழுதுவதும், நாமம் சொல்லிக்கொண்டே மஞ்சள் அக்ஷதை பொறுக்குவதும், ஆயிரம் இரண்டாயிரம் என்று எண்ணிக்கை ஒருவரை ஒருவர் மிஞ்சும் வண்ணம் இருக்கும். வருவோர் போவோருக்கெல்லாம் நீர் மோர் பானக விநியோகம். மாலையில் அருகிலிருக்கும் ஸ்ரீ கோதண்டராமர் கோவில் தரிசனம். இரவு ஏழு மணிக்கு வழக்கம் போல, வீட்டிலேயே ஆண்டாண்டு காலமாய் நடந்து கொண்டிருக்கும் புதுக்கோட்டை ஸ்ரீ ராஜகோபால சர்மாவின் இராமாயண உபன்யாசம். வீட்டிலுள்ள அத்தனைபேர்களும் ஆஜராகிவிட வேண்டும் என்ற தாத்தாவின்

அன்புக் கட்டளையை மீறும் துணிவு யாருக்கும் இருந்ததில்லை. ஊர்மக்களும், உபன்யாசம் கேட்க வருவதுண்டு. முடிவில் அத்தனை பேருக்கும் நைவேத்திய பதார்த்தம் விநியோகமும் உண்டு.

இப்படியே தமிழ் வருஷப்பிறப்பும்!

அன்றும் ஸ்ரீ ராமநாமம் உச்சரித்துக் கொண்டே 108 முழு அக்ஷதை சேகரித்து, முந்தைய நாளே மடியுடன், சிறிய சிறிய சதுரங்களாக வெள்ளைத் துணி கத்தரித்து, மஞ்சள்பொடி திரவத்தில் ஊறவைத்து, உலர்த்தி வைக்கப்பட்டுள்ள மஞ்சள் துணியில் மூட்டையாகக் கட்டி வைத்து விட வேண்டும். எத்தனை மூட்டைகள் கட்டி வைக்கிறோம் என்பதில் தான் பேரன் பேத்திகளுக்கிடையே கடும் போட்டி! ஸ்ரீ காஞ்சி மடத்தின் முத்திராதிகாரியான தாத்தா, ஊர்காரர்களும் கொண்டுவந்து கொடுக்கும் மஞ்சள் மூட்டைகளையும் சேகரித்து, தக்ஷிணையுடன் ஸ்ரீ மடத்திற்கு அனுப்பி வைப்பார். ஸ்ரீ ராமநாம அக்ஷதை பெரியவாளின் பூஜைக்கும் மஞ்சள் துணிகள் திரிகளாக விளக்கேற்றவும் எடுத்துக் கொள்வார்கள் என்று எங்களுக்கு விளக்கிச் சொல்வார் தாத்தா.

இந்த வழக்கங்கள் இப்போது நம் குடும்பங்களிடையே இருக்கின்றனவா? இருந்தால் சந்தோஷம், இல்லையென்றால், உங்கள் குடும்பத்தில் இன்றைய தலைமுறையினருக்கு அறிமுகப்படுத்தினால் அதைவிட சந்தோஷம். அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

ஸ்ரீராம் ஜெயராம் ஜெய ஜெய ராம்!

**டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்.**


## “வேதாந்த பிரபோதம்” புத்தகம்

நம் பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள் அருளியது. தற்போது கிரி டிரேடிங் நிறுவனத்தினர் அழகான வடிவத்தில் வெளியிட்டுள்ளார்கள். வேதபாரதி மூலம் பெறுவோர்க்கு சிறப்பு சலுகை உண்டு.

தொடர்புக்கு : **9444445156 / 97909 20672**

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய,
ஓம் நமோ நாராயணாய.

# ஸ்ரீமத் பகவத்கீதை

டி. சூரியநாராயணன் பகுதி - 12



நாம் எந்த செயலை ஆரம்பிப்பதற்கு முன்பாக - அது உலக சம்பந்தமான செயலாக இருந்தாலும் சரி அல்லது ஆன்மீக சம்பந்தமான செயலாக இருந்தாலும் சரி - முதலில் இறை வணக்கம் செய்வதுதான் முறை. அரசு விழாக்களில் கூட தற்போது அந்த விழா ஆரம்பிக்கும் முன் இறைவணக்கம் அல்லது நாட்டுப் பண் பாடுகிறார்கள். தினமும் நாம் காலையில் தூங்கி எழுந்தவுடன் அன்றைய தினம் நம்முடைய வாழ்க்கை நல்லபடியாக அமைய வேண்டும் என்பதற்காக படுக்கையிலேயே இறைவனை நினைத்து ஒரு ஸ்லோகம் சொல்ல வேண்டும். பிறகு பூமியில் கால்களை வைக்கும் போதும், குளிக்கும் போதும், சாப்பிடும் போதும், வெளியில் கிளம்பும் போதும், இரவில் படுக்கும் போதும் இறைவனை நினைத்து ஸ்லோகங்கள் சொல்ல வேண்டும் என்று நம் முன்னோர்கள் சொல்லியுள்ளார்கள்.

நம்முடைய மனதை ஒரு நிலைப்படுத்தி அதை நாம் செய்யவிருக்கும் செயலில் ஈடுபடுத்த வேண்டும். நம்மை இறைவனின் அருளுக்குப் பாத்திரமாக்கிக் கொள்ள வேண்டும். கூடவே நம் குருநாதரின் கிருபயையும் நமக்கு வேண்டும்.

இதுபோல் ஒவ்வொரு முறையும் ஸ்ரீமத் பகவத் கீதையை படிக்க ஆரம்பிப்பதற்கு முன்பாக கீதா ஸாரத்தை உணர்த்தும் கீதையின் “தியான ஸ்லோகத்தை” அவசியம் சொல்ல வேண்டும்.

*அந்த தியான ஸ்லோகங்களையும் அவற்றின் பொருளையும் இப்போது நாம் பார்ப்போம். இந்த தியான ஸ்லோகங்கள் பகவத் கீதையில் கிடையாது. இது 16ம் நூற்றாண்டில் வங்காளத்தில் வாழ்ந்து வந்த* **'மதுஸூதன சரஸ்வதி''** *என்ற புலவரால் எழுதப்பட்டதாக கூறுகிறார்கள். ஒரு சிலர் இவற்றை* **"ஶ்ரீதர ஸ்வாமி''** *என்பவர் எழுதியதாக கூறுகிறாரகள். ஆனால்* **"சர்வபள்ளி ஶ்ரீ ராதாகிருஷ்ணன்''** *மற்றும்* **"ஸ்வாமி சின்மயாநன்தா''** *போன்ற பெரும்பாலானவர்கள் இதை எழுதியது* **"மதுஸூதன சரஸ்வதி''** *தான் என்று கூறியுள்ளார்கள்.*

*இனி அந்த ஸ்லோகங்களையும் அதன் பொருளையும் பார்ப்போம்.*

**1. ஓம் பார்த்தாய ப்ரதிபோதிதாதம் பகவதா நாராயணேன ஸ்வயம்**
**வ்யாஸேன க்ரதிதாம் புராணமுனினா மத்யே மஹாபாரதம்**
**அத்வைதாம்ருத வர்ஷிணீம் பகவதீம் அஷ்டா தசாத்யாயினீம்**
**அம்பத்வாம் அனுஸந்ததாமி பகவத் கீதே பவத்வேஷிணீம்**

**பொருள் :** *ஓம் தாயே பகவத் கீதே சாக்ஷாத் பகவான் நாராயணனால் பார்த்தனுக்கு உபதேசிக்கப் பெற்றவள். புராண முனியாகிய ஶ்ரீ வியாசரால் மஹாபாரதத்தின்கண் அமைக்கப் பெற்றவள். அத்வைத அமிர்தத்தை வர்ஷிப்பவள். பிறவிப் பிணியைப் போக்குபவள். பதினெட்டு அத்தியாயங்களை உடையவள் ஆகிய பகவதி உன்னை தியானிக்கிறேன்.*

**விளக்கம் :** *இந்த ஸ்லோகத்தில் ஆசிரியர் ஶ்ரீமத் பகவத் கீதையை தாயாக உருவகப்படுத்தி ஸ்தோத்திரம் செய்து நமஸ்கரிக்கிறார். கீதை யாரால் யாருக்கு எங்கு எப்போது எப்படி வழங்கப்பட்டது என்னும் விஷயத்தை சுருக்கமாக கூறியுள்ளார்.*


தொடரும்....

**டி.சூரியநாராயணன்**

*தினமும் சந்த்யா வந்தனம், அனுஷ்டானத்துடன் ஸகஸ்ர காயத்ரி ஜபிப்பவர்கள் தயவு செய்து தங்கள் விலாசத்தை வேதபாரதிக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம். நமது கலாச்சாரத்தை கடைபிடிக்கும் வேதபாரதி வாசகர்களை கௌரவிக்க விழாவிற்கு அழைக்கும் நோக்கோடு இச்செய்தி போடப்பட்டுள்ளது.* **தொடர்பு : 9443495950**

# சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை

## திருப்தி



சென்றமாத தொடர்ச்சி

தனக்கு உதவி புரியுமாறு மீண்டும் இறைவனிடம் சென்று கெஞ்சினான். அதன் பின், குழந்தை எல்லோரிடமும் சகஜமாகப் பேச ஆரம்பித்தது. இப்படியே பல வித பிரார்த்தனைகளுக்குப் பிறகு, அப்பக்தன் தன் மகனுக்குத் திருமணத்தையும் செய்து வைத்தான். மணமாகி சில வருடங்கள் கழிந்தும், மருமகள் கர்ப்பம் தரிக்கவில்லை. ஆகவே, பக்தன் இறைவனை நாடி, "நீ எனக்குக் குழந்தையைக் கொடுக்காமலேயே இருந்திருந்தால், நான் மிகவும் சந்தோஷமாக இருந்திருப்பேன் என்று நினைக்கிறேன். இப்பொழுது என் பையனுக்குக் குழந்தைப் பிறக்காமலிருப்பதை நினைத்துப் பார்த்தால் என் மனம் மிகவும் வேதனையடைகிறது" என்று கூறி வருத்தப்பட்டான்.

இத்தகைய பிரார்த்தனைக்கு என்றாவது முடிவிருக்குமா? இருக்காது. பொதுவாக, மக்கள் தங்களிடம் இருப்பதைக் கொண்டு திருப்தியடைவதில்லை. நமது முன்னோர்கள், "ஒரு ரூபாயை வைத்திருப்பவன் நூறு ரூபாய் இருந்தால், தன்னிடம் ஆயிரம் ரூபாய் இல்லையேயென அவன் கவலைப்படுவான். அப்படி ஆயிரம் ரூபாய் ஒருவனுக்குக் கிடைத்துவிட்டால், அவன் தன் இலட்சியங்களையெல்லாம் துறந்துவிட்டு இலட்ச ரூபாய்க்காக ஏங்குவான். இலட்சாதிபதியாக இருப்பவனோ அரசனாகிவிட வேண்டுமென்று திட்டங்கள் தீட்டுவான். அரசனுக்கு எப்படியாவது செல்வத்தின் அதிதேவதையான குபேரனைப் போலாகிவிட வேண்டுமென்று தீராத ஆவல் இருக்கும். குபேரனோ, தேவர்களின் அதிபதியான இந்திரனைப்போல் இருக்க விருப்பப்படுவான். இந்திரன் பிரம்மாவின் ஸ்தானத்தை அடைந்துவிட ஆவலுடன் காத்துக்

கொண்டிருப்பான். பிரம்மா, தான் எப்பொழுது விஷ்ணுவின் பதவியை அடைவது என்று ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருப்பார். விஷ்ணுவுக்கு சிவனின் நிலையை அடைந்துவிட வேண்டுமென்ற ஏக்கம் இருக்கும். உண்மையில், எவர்தான் ஆசைகளின் எல்லையை அடைந்திருப்பார்?" என்று கூறுயிருக்கிறார்கள்.

இவ்விடத்தில் நகைச்சுவையுடன் கூடிய ஒரு சுலோகத்தின் பொருளை நினைவு கூர்வது மிகவும் பொருத்தமாயிருக்கும், "ஒரு மலை மிகப் பெரியது, மலையைக் காட்டிலும் பெரியது கடல், கடலைவிட பரந்து விரிந்து காணப்படுவது ஆகாயமாகும். அந்த ஆகாயத்தைக் காட்டிலும் பெரியவர் இறைவன். அந்த இறைவனையும் விட விசாலமாய் இருப்பது ஆசையே!'' அதிருப்தியானது ஒருவனை பரிதாபகரமான நிலைக்குத் தள்ளி விடுகிறதென்றால், திருப்தியோ அவனுக்கு நிலையான ஆனந்தத்தையளிக்கிறது. வைராக்கியத்தோடு உள்ளவன் திருப்தியோடு இருப்பான். திருப்தி வைராக்கியத்தை வளர்க்கிறது.

(தொடரும்)

**ஜாதக பரிவர்த்தனைக்கு அணுகவும் :**

எண்.9, பழனி ஆண்டவர் தெரு,
ராதாநகர், குரோம்பேட், சென்னை - 600 044.

| | |
|---|---|
| **திருமதி. தனலட்சுமி** | **திருமதி. ராஜலட்சுமி** |
| **9444140119** | **7092199447** |

**ஜாதக பரிவர்த்தனைக்கு**

புதுவையில் பதிவு செய்ய விரும்புவோர் அணுகவும் :

**ஸ்ரீ பாலசுப்பிரமணியன்** 9442094380

**ஸ்ரீ நடராஜன்** 9443103404

V.KRISHNAMOORTHY
Founder & Managing Trustee



# SRI MATHA TRUST

Since year 2000 a real sanctuary for ailing poor cancer victims




## AN INCREDIBLE CHAMPION



Addressing pain with compassion

**V.KRISHNAMOORTHY**
Sri Matha Trust, Adyar

(space constraint - hence only excerpts - from a book published during 2017 by
**Prof.N.Chandrasekaran**
Faculty, Loyola Institute of Business Administration, Chennai)
Notion Press, Chennai - 31.

### Author's Introduction

Stories that tell of journeys from humble backgrounds to stardom, wealth and power are rare stories of public lives that make folklore and movies. There are many unnoticed personalities who came from not-so cosy backgrounds, and yet, are into social life in a big way. A big way because they make their primary purpose in life the relieving of pain of many deprived less fortunate humans!

People who are in pain look for compassion, love and warmth, not just money or other material support! Imagine a thirty-two year old man who is married and living with a young wife and a, two-year-old-daughter. He is diagnosed as suffering from cancer. He spends all of his money and gets into debt. His spouse does not earn an income. There is no emotional support available, as their families were small and dwindled. What is it that the couple and their child need most? Money, empathy or someone promising to stick around to help them go past this unfortunate situation! Ideally speaking, the man needs



நம்ம தர்மசாலாவில் மகிழ்ச்சியுடன் தங்கியிருக்கும் ஏழை புற்றுநோயாளிகள்

to be in a place that provides care till he gets cured. Cancer is curable if identified and attended to at an early stage. Rural poor people who suffer from cancer come to cities for treatment. Amongst the issues on which they desperately need help are places to stay for themselves and their caretakers.

In Chennai, Mr.V.Krishna moorthy runs a free Dharmasala with food and shelter since year 2000, which provides such care and support not only to patients, but also to the caretakers who accompany the patients.

## Author's Conclusion

Krishnamoorthy treats every man and woman like his own children. At all times, he puts his best foot forward to bring about improvement in the patients' care. When the patients and care-takers feel they are receiving genuine concern, they feel comfortable. This could be transitory! But it is essential in managing the kind of crisis created by disease like cancer. There is, of course, much pain and sorrow engulfing patients and caretakers. Someone needs



புற்றுநோயாளிகளுக்கு உணவு பரிமாறும் செயல் அறங்காவலர் திரு.ஆகாஷ்ராம்

to share the burden and make the rest of the family see a light in the darkness, a future after torment. You must spend time with Krishnamoorthy at the Trust premises as an observer. You will feel the enormous energy and positive spirit that galvanise the place. His own helplessness and desperation when his mother passed away for want of proper medical attention at his young age and his family's inability to afford the best of food had hit Krishnamoorthy hard. Hence, he has committed himself to helping as many people as possible in similar conditions, with great devotion.

Giving what you could not have is a great way of approaching life. I may not have completely portrayed what and how I felt after meeting Krishnamoorthy.



A 'fatherly pat' cheers the ailing poor cancer victim, who suffers acute body pain...

I wish cancer has a cure. At the least, I wish disease like cancer are not so severe as to require the services of Krishnamoorthy and his ilk.
We all know how such thoughts are wishful, and will probably remain so!
Pray to God to balance the world by blessing us with kind souls like Krishnamoorthy!




This is Krishnamoorthy...You would **agree** on meeting him.

சாதி, மதம், இனம், மொழி பேதங்களைக் கடந்து, அன்பு என்னும் ஒற்றை வார்த்தையில் கட்டமைக்கப்பட்டதே ஏழை புற்றுநோயாளிகளின் ஒப்பற்ற புகலிடமான ஸ்ரீ மாதா டிரஸ்ட் நிர்வகிக்கும் **"நம்ம தர்மசாலா"**.

அடையாறு கேன்சர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வெளியூர்களிலிருந்து வரும் ஏழை புற்றுநோயாளிகளை நம்ம தர்மசாலா தாயுள்ளத்துடன் அரவணைத்துக் கொள்வதால், ஏழை புற்றுநோயாளிகள் தடையின்றி சிகிச்சை பெற்றுக்கொண்டு, அவர்களது நோய் முற்றி அடுத்தடுத்த நிலைக்குச் செல்வது தடுக்கப்பட்டு, அவர்களது எதிர்காலம் மீட்டெடுக்கப்படுகிறது.

நம்ம தர்மசாலாவில் ஏழை புற்றுநோயாளிகளுக்கும், அவரது ஒரு உதவியாளருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர், சுத்தமான கழிப்பறை வசதியுடன் கூடிய பாதுகாப்பான தங்குமிடம்; மூன்று வேளையும் சத்தான, சுவையான, சைவ உணவு; காபி/டீ/பால்/ சத்துமாவு கஞ்சி / வேகவைத்த சுண்டல், மருத்துவர் பரிந்துரைக்கும் மருந்து/மாத்திரைகள்; பண்டிகை தினங்களில் புத்தாடைகள் என அனைத்தும் முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது.

இத்தனை சேவைகளையும் ஸ்ரீ மாதா டிரஸ்ட், ஏழை புற்று நோயாளிகளிடமிருந்து ஒரு ரூபாய்கூட வசூலிக்காமல் இத்தனை ஆண்டு காலம் சற்றும் தொய்வின்றி,

திருவான்மியூரைச் சேர்ந்த திரு.குப்புசாமி அவர்கள், தனது பேரன் செல்வன் ஸ்ரீ கிருஷ்ணசர்மா அவர்களின் உபநயன தினத்தன்று, ஏழை புற்று நோயாளிகளுக்கு உணவு வழங்கிட நன்கொடை வழங்கி, தனது அனுபவத்தை எங்களது வருகையாளர் பதிவேட்டில் பதிவுசெய்து மகிழ்ந்தார்.

"Krishnamoorthy sir is doing a wonderful job for the society, which can't be measured by any words."



அனைவரும் போற்றத்தக்க வகையில் செய்து வருவதற்கு உங்களைப் போன்றோரின் மனிதநேயம் மிக்க மனங்களே காரணம் என்றால் அது மிகையல்ல.

ஸ்ரீ மாதா டிரஸ்ட் தனது சேவை பயணத்தின் அடுத்த முயற்சியாக ஏழை புற்றுநோயாளிகளுக்காக அனைத்து வசதிகளும் கொண்ட, மற்றுமொரு பிரத்யேக காப்பகத்தை, கேன்சர் மருத்துவமனைக்கு அருகில், ரூ.5 கோடி திட்ட மதிப்பீட்டில், சுமார் 200 படுக்கை வசதிகளைக் கொண்ட ஒரு கட்டிடத்தை சொந்தமாகக் கட்டி அதில் நிறுவிட ஸ்ரீ மாதா டிரஸ்ட் முடிவு செய்துள்ளது. இன்றுவரை எங்களது சேவைப் பணிக்கு உறுதுணையாய் இருந்து வரும் மனிதநேயம் மிக்க நன்கொடையாளர்களான நீங்கள், எங்களது இந்த புதிய முயற்சிக்கும் தங்களது நல்லாதரவை வழங்கி, ஏழை புற்றுநோயாளிகளை காத்திட வேண்டுகிறோம்.




Here you see a learned Chartered Accountant Shri G.NAGANATHAN (R.K.Kumar & Co.) along with his wife Smt UMA testifying the bonafides of our service to poor cancer victims

**தங்களது நன்கொடையை இவ்வாறு வழங்கலாம்**

• ரூ.1,00,000/- நிதியளித்து நிரந்தர காப்பாளர் ஆகலாம் • ரூ.75,000/- நிதியளித்து வள்ளல் ஆகலாம் • ரூ.25,000/- நிதியளித்து ஒரு நாள் "**நம்ம தர்மசாலா**"வின் செலவினை ஏற்கலாம் • ரூ.10,000/- நிதியளித்து ஒரு நாள் உணவு செலவினை ஏற்கலாம் • ரூ.5,000/- நிதியளித்து மதிய / இரவு உணவு செலவினை ஏற்கலாம் • ரூ.3,000/- நிதியளித்து காலை உணவு செலவினை ஏற்கலாம்

**Kindly donate towards our building fund any amount and become an active participant in this noble cause**

Kindly send your contribution by CHEQUE / NEFT / Money Order

Account Name : **SRI MATHA TRUST**
Bank Name : INDIAN OVERSEAS BANK, Gandhi Nagar, Chennai-20.
Current A/c No.:163502000001090 IFSC Code:IOBA0001635

Donations to our Trust is exempted U/S.80 (G) of the Income Tax Act. After doing this benevolent act kindly SMS your postal mailing address or kindly e-mail the donation details to enable us send our receipt.

Kindly visit our "Namma Dharmasala"

Admin Office: 95/6, Rams Apartment, 2nd Main Road, Gandhi Nagar, Adyar, [next to Harini Skin & Laser Clinic] Chennai - 600 020. Tel: 044 - 2442 0727, 044 - 4266 1687

Namma Dharmasala: 9, Yogi Garden, Sriram Nagar Main Road, Adjacent to IIT Compound, Near New Cancer Institute, Chennai-113. Tel: 044-4509 8647

Regd. Office: "Natha Kamalam", No.1-A, Periazhwar Street, Sundaram Colony, East Tambaram, Chennai - 600 059.

Mobile: 94440 01065 / 93810 20727 / 90032 47857

Email: vkrishnamoorthy.smt@gmail.com www.srimathatrust.org

and extend your helping hand...

# AURO MIRA MEDI AIDS

*House of Home Healthcare Products*

- Breast Pumps
- Blood Glucose Meters
- BP Meters
- Alpha Beds
- Adult Diapers
- Under Pads
- Wheel Chairs
- Physio Products
- Home Sleep Study
- Oxygen Concentrator
- CPAP / Bi Pap
- Pulse Oxymeters
- Nebuliser
- Morning Walker
- Weighing Scale
- Air Purifier




**முதியோர்களை சிறப்பாக பராமரிக்க தேவையான மருத்துவ உபகரணங்கள் எங்களிடம் சலுகைவிலையில் கிடைக்கும்.**

New No.36, Old No.32, Sriram Nagar Main Road,
Near I.I.T. Taramani, Chennai - 600 113.
**9382159199 | auromiramediaids@gmail.com**
**www.auromiramediaids.in**

## மஹா பெரியவாளின் அற்புத விளக்கங்கள்

# தெய்வங்களுள் பேதம் ஏன்?



ஒவ்வொரு ஸ்வாமியையும் குறித்ததாக ஒவ்வொரு புராணம் இருப்பதால் சில ஸந்தேஹங்கள் வருகின்றன. சைவமான புராணங்களில், 'சிவன்தான் பரமாத்ம தத்வம்;

சிவன்தான் - ஸ்ருஷ்டி - ஸ்திதி - ஸம்ஹாரம் எல்லாவற்றிக்கும் அதிகாரம் இவர் சொல்படி இவருக்கு அடங்கித்தான் விஷ்ணு பரிபாலனம் பண்ணுகிறார். அவர் (விஷ்ணு) வெறும் யோகி, மாயையில் அகப்பட்டுக் கிடப்பவர். சிவன் தான் யோகி. சிவன் தான் ஞானஸ்வரூபி" என்றெல்லாம் சொல்லியிருக்கும். சிவனுக்கு விஷ்ணு அடங்கினவர். சிவனை விஷ்ணு பூஜை பண்ணுகிறார், சிவனுக்கு அடங்காமல் சில சமயத்தில் அவர் சிவனை எதிர்த்தபோது தோற்றுப் போய் --பங்கப்பட்டிருக்கிறார் என்றெல்லாம் சொல்லி, இது ஒவ்வொன்றுக்கும் திருஷ்டாந்தமாக அநேக கதைகளைச் சொல்லியிருக்கும் வைஷ்ணவமான புராணங்களைப்பார்த்தாலோ இதை அப்படியே தலைகீழாகத் திருப்பி வைத்து அதற்கும் ஆதரவாக ஏகப்பட்ட விருத்தாத்தங்களைக் காட்டியிருக்கும். "பேய் பிசாசுகளைக் கட்டிக்கொண்டு சுடுகாட்டில் உட்கார்ந்திருக்கிற சிவனா ஒரு ஸ்வாமி? சக்கரவர்த்தியான வைகுண்டநாதரின் தாஸர் தான் அவர்" என்று அவற்றில் சொல்லியிருக்கும்.

சிவன், விஷ்ணு என்ற இரண்டு தெய்வங்களுக்குள் மட்டும் என்றில்லை. ஒவ்வொரு புராணத்திலும் ஏதோ ஒரு தெய்வத்தை - அது ஸுப்ரம்மண்யராயிருக்கலாம், பிள்ளையாராக இருக்கலாம்

அல்லது சூரியனாக இருக்கலாம். ஏதோ ஒன்றை முழுமுதற் கடவுளாகச் சொல்லி மற்ற எல்லா தெய்வங்களையும் மட்டம் தட்டி, அவை இந்த ஒரு மூர்த்தியைத்தான் பூஜை பண்ணுகின்றன. அப்படி பண்ணாமல் அகம்பாவப்பட்ட போது இதனிடம் தோற்றுப் போய் மானபங்கப் பட்டிருக்கின்றன என்று கதைகளிருக்கும், இதைப் பார்த்தால், 'என்ன இப்படி ஒன்றுக்கொன்று வித்தியாசமாய் இருக்கிறதே! இதில் எது நிஜம், எது பொய்? எல்லாம் நிஜமாக இருக்க முடியாது. சிவன் விஷ்ணுவைப் பூஜை பண்ணினார் என்றால் விஷ்ணு சிவனை பூஜை பண்ணுவது அயுக்தம். இப்படி நடக்காது, திரிமூர்த்திகளுக்கு மேல் அம்பாள் இருக்கிறார் என்றால் அவளே பரமேச்வரனிடம் பதிவிரதையாக அடங்கிக் கிடக்கிறாளென்பது தப்பு. அதனால் எல்லாப் புராணமும் நிஜமாய் இருக்கமுடியாது. எது நிஜம்? எது பொய்? ஒரு வேளை எல்லாமே பொய்தானா? அப்படித்தான் இருக்கும் போலிருக்கிறதே! என்று ஸந்தேஹங்கள் தோன்றுகின்றன.

தர்க்க ரீதியாகப் பார்த்தால் எல்லாம் நிஜமாக இருக்க முடியாதென்று தோன்றினாலும், எல்லாமே நிஜம்தான். ஒரு சமயத்தில் தோற்றுப்போன ஸ்வாமியே இன்னொரு சமயம் ஜெயிக்கிறது. ஒரு சமயம் பூஜை பண்ணின ஸ்வாமியே இன்னொரு சமயம் பூஜை பண்ணப்படும் ஸ்வாமியாகிறது.

-தொடரும்...

- மே மாதம் முதல் புதிய தொடர்கள் ஆரம்பம் ஆக உள்ளது வாசகர்கள் படித்து பயனடைந்து தங்கள் கருத்துக்களை அனுப்ப வேண்டுகிறோம்.

- வேதபாரதி மாத இதழ் வாசகர்கள் தங்கள் பகுதிகளில் பண்பாட்டு வகுப்புகள் தொடங்க விருப்பப்பட்டால் வேதபாரதியை தொடர்பு கொள்ளவும்.
  தொடர்பு எண் : 9443495950

# பெற்றோர்களே! கவனியுங்கள்!

## (குழந்தை வளர்ப்பு)

காந்தலக்ஷ்மி சந்திரமௌலி பாகம் - 2 பகுதி - 43

மொபைல் - அதன் தாக்கங்கள் என்று விஷயத்திற்கு செல்லும் முன்னர் ஒரு சில விஷயங்களைக் காணலாம்.

என்னிடம் வரும் பெற்றோர்களை பொதுவாக மூன்று விதமாகப் பிரித்துப் பார்க்கலாம். குழந்தைகள் எதைச் செய்தாலும் ஓ.கே. தான். அவர்களை திருத்துவது என்பது அவர்களை அடக்குவது ஆகும் என்று எண்ணுபவர்கள்.

நான் சொல்வதை கேட்க வேண்டும். நான் நினைப்பதை தான் செயல்படுத்த வேண்டும். குழந்தைகளுக்கு என்ன தெரியும்? எனும் தீர்மானத்தோடு இருப்பவர்கள்.

மூன்றாவது வகை 'ஆற்றில் ஒரு கால் - சேற்றில் ஒரு கால்' என்று தானும் குழம்பி மற்றவர்களையும் குழப்புவார்கள்.

பொதுவாக மேற்கூறிய மூன்று வகைகளில் தான் பெற்றோர்களை பிரித்துப் பார்க்க இயலும்.

இதைத்தாண்டி இன்று நான்காவது வகை பெற்றோர்களின் ஆதிக்கம் மிக அதிகமாக உள்ளது.

என் மொபைல் தான் எனக்கு மௌன குரு. கூகுள் தான் என் கடவுள். யாரிடமும் நான் எதையும் கேட்க வேண்டிய அவசியமில்லை.

இந்த முதல் வகை மற்றும் நான்காம் வகை பெற்றோர்கள் 'வேதபாரதியின் யுவஸ்ரீ' யிடமிருந்து காத தூரம் ஓடுவார்கள்.

இரண்டாவது வகை பெற்றோர்கள் வருவார்கள். ஆனால் எதையும் காது கொடுத்து கேட்க மாட்டார்கள். ஏனென்றால் ஏற்கனவே தீர்மானித்து விட்டார்கள்! தன் குழந்தை தன்னோடு சேர்ந்து இருப்பதை விட தன்னைச் சார்ந்து இருக்க வேண்டும் என்று வாழ்நாள் முழுவதும் நினைப்பவர்கள்.

**“அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்**
**வற்றல் மரந்தளிர்த் தற்று”**

*(அதிகாரம் - 8 - அன்புடைமை - குறள் 78)*

*‘மனதில் அன்பு என்பது இல்லாத உயிர் இல்லறத்தில் ஈடுபட்டு வாழ்வது என்பது ஒரு பாறை நிலத்தில் ஈரம் வற்றிய ஓர் உலர்ந்த மரம் துளிர்த்தது போன்றதாகும்’ என்கிறார் வள்ளுவர் பெருமான்.*

*அன்பில்லாத பெற்றோர் இருக்க இயலுமா? ‘குழந்தைகளுக்காகவே வாழ்கிறோம், உழைக்கிறோம்’ என்று பெற்றோர்கள் கூறுவது எனக்கும் கேட்கிறது.*

*இனி பெற்றோர்கள் ‘அன்பு’ எனும் போர்வைக்குள் ‘டீன் ஏஜ்’ எனப்படும் ஏற்கனவே குழம்பியிருக்கும் குழந்தைகளுக்கு ஏற்படுத்தும் வன்முறைகளை காண்போம்.*

*“என்னது வன்முறையா?” என்று நீங்கள் என்னை அடிக்க வருமுன்னர் மேற்கொண்டு படித்துப் பார்த்து ‘வேதபாரதி’ யிடம் தொடர்பு கொள்ளுங்கள்.*

*முதலில் ஒவ்வொரு வீட்டிலும் ஏதோ ஓர் காலகட்டத்தில் ஏற்படும் மூத்தோரின் உயிரிழப்புகளைக் காண்போம்.*

*மரணம் என்பதை சினிமாவில், டி.வியில் பார்த்து மட்டுமே புரிந்து கொள்ளும் குழந்தைகளுக்கு தன் வீட்டில் தாத்தா அல்லது பாட்டி இறக்கும் பொழுது நேரடியாக காண்பது முதல் முறையாக இருக்கக்கூடும்.*

*அப்பா, அம்மா வரும் உறவுகள் ஓயாது பேசுவதையும், இரண்டு நாட்கள் முன்பு வரை சலித்துக் கொண்ட அம்மாவோ, அப்பாவோ இப்பொழுது திடீரென்று கண்கலங்குவதைப் பார்த்து உருகிப் போவதில்லை. மாறாக ‘இவர்களில் யாரும் உண்மையானவர்கள் இல்லை’ என்று தானே நினைக்கும்.*

*ஒவ்வொரு தாயும், தந்தையும் இதை முன்பாகவே புரிந்து கொண்டு இத்தகைய சூழலில் தத்தம் குழந்தைகளின் மனநிலையை கையாள வேண்டியது மிக, மிக முக்கியம்.*

*எப்படி என்று காண்போம்.*

*தொடரும்....*

## புதிய அறிமுகம்

*ஆசிரியர் குறிப்பு :*






**ஸ்ரீ அமிதாப் தோஷி,** *மும்பையில் பிறந்து வளர்ந்து 1988ம் ஆண்டிலிருந்து சென்னை, புரசைவாக்கத்தில் வசித்துவரும் குஜராத்தி ஜெயின் சமூகத்தவர். தேசப்பற்றும், தெய்வப் பற்றும், குடும்பப்பற்றும், இந்திய கலாச்சாரப்பற்றும் மிகுந்தவர். சிறந்த குஜராத்தி எழுத்தாளர், பத்திரிகையாளர். இவரது சமூக அக்கறை மிகுந்த பல கட்டுரைகள், குஜராத்தி மொழியின் மிகப் பிரபல பத்திரிகைகளில் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றன. அவற்றை தொகுத்து 'பல்மா பரம்'* **(THE MOMENTS)** *என்கிற தலைப்பில் தனது முதல் புத்தக வெளியீட்டை சமீபத்தில் மும்பையில் மாபெரும் சபையில் வெளியிட்டுள்ளார். அதிலுள்ள கட்டுரைகள் அனைத்தையும் தமிழில் மொழி பெயர்ககும் வாய்ப்பு எனக்குக் கிடைத்துள்ளது. அத்தகைய சிறந்த பண்பாளரை, இந்த இனிய புத்தாண்டின் துவக்கத்தில், வேதபாரதி வாசகர்களுக்கு அவருடைய கட்டுரை மூலமே அறிமுகப் படுத்துவதில் நான் மிகுந்த பெருமை அடைகிறேன்.*

**டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்.**

## கொரோனா வைரஸ் - மூன்றாம் உலகப்போர்

*தற்போதைய சூழ்நிலையில், உலகம் முழுவதுமே கொரோனா வைரஸ் பயத்தில் மூழ்கிக்கிடக்கிறது. அதன் பாதிப்பிலிருந்து தப்பிப்பதற்கு, எத்தகைய சக்திவாய்ந்த நிவாரணமும் இதுவரை இல்லை. இந்த பூமியிலேயே வல்லரசு*

நாடு என்று பெயர் பெற்றிருக்கும் அமெரிக்கா கூட வழியின்றி இருக்கிறது. இயற்கைக்கு எதிராக மனிதன் செயல்படும்போது இத்தகைய சூழல்கள் உருவாகிவிடுகின்றன. கற்கால மனிதன் சமைத்து உண்ணும் கலையை அறியாதிருந்த போது, மாமிசங்களை பச்சையாகவே உட்கொண்டான். ஆனால் இன்று விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் மிக அதிக முன்னேற்றத்தை எட்டியிருக்கும் காலகட்டத்தில் சீனர்கள், பச்சை மாமிசங்களையும், பூச்சிகளையும் உட்கொள்வது அருவருக்கத்தக்கதாக உள்ளது. இத்தகைய கொடும் நடத்தை பற்றிய எண்ணங்கள் நமக்கு மிகுந்த வருத்தத்தை ஏற்படுத்துகிறது.

பெரும்பாலும் காய்கறி உணவுகளையே உட்கொள்ளும் நம் தேசத்தின் 130 கோடி ஜனங்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது இந்த வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவே. அநேகமாக இல்லை என்று கூட சொல்லலாம். இன்று முழு உலகம் காய்கறி உணவுகளுக்கு மாறி கொண்டிருக்கின்றன. பூமிக்கு கீழே விளையும் காய்கறிகளை உண்ணாமல் இருப்பது, சூரிய உதயத்திற்கு பின்பும் சூரிய அஸ்தமனத்திற்கு முன்பும் மட்டுமே உணவு உட்கொள்ளும் ஜைனர்களின் உணவுப் பழக்கவழக்கங்களாலும், பெரும்பாலான இந்துக்கள் சைவ உணவு மட்டுமே உண்பதை வழக்கமாகக் கொண்டிருப்பதாலும் இது போன்ற வைரஸ் தாக்குதல்கள் கணிசமான அளவில் இங்கே குறைந்தே காணப்படுகின்றன. மேலும் கொதிக்க வைத்த தண்ணீரையே நாம் குடிப்பதும் பிரதான காரணமாக இருக்கிறது.

மிகவும் ஆபத்தான கொரோனா வைரஸ் விவகாரம் சில அரசியல்வாதிகளால் மிகவும் பூதாகாரமாக்கப்படுகிறது. இந்தக் காலக்கட்டத்தில் நாம் அனைவரும் ஒருங்கிணைந்து ஒன்றுபட்டு, உயிர்பலி வாங்கும் வைரஸ் பரவுதலுக்கு எதிராகப் போராட வேண்டும். மூக மூடிகள், சுத்தீகரிப்பு திரவங்கள் ஆகியவற்றை விநியோகிப்பதற்கு நமக்கு சமூக அக்கறை வேண்டும். இதுதான் சாக்கு என்று இத்தகைய அத்தியாவசியப் பொருட்களின் விலையை அதிகரித்து லாபம் சம்பாதிக்க நினைப்பது

கேடுகெட்டத்தனம் மட்டுமல்லாமல் உடனடியாக அரசாங்கம் அவர்கள் மீது கடும் நடவடிக்கையை மேற்கொள்ளவும் வேண்டும். போர்கால நடவடிக்கை போல இந்த வைரஸ் ஆபத்திலிருந்து மனித உயிர்களைப் பாதுகாக்கும் பணியில் நம் ஒவ்வொருவரின் பங்கும் இருக்க வேண்டும். அதற்கு சில வழிகளை நாம் கடைபிடிப்பது மிகவும் அவசியம் அவைகள் :

1. வியாபாரிகள் மூகமூடிகள், சுத்தீகரிப்பு திரவங்கள், சோப் வகைகள் போன்ற பொருட்களில் அதிக லாபம் பார்க்காமல் குறைந்த விலையிலோ அல்லது இலவசமாகவோ வழங்க வேண்டும்.

2. இந்த இக்கட்டான காலகட்டத்தில் மருத்துவர்கள் தங்கள் கட்டணங்களை மிகவும் குறைத்துக் கொள்ள வேண்டும்.

3. செய்தி ஊடகங்கள், தொலைக்காட்சி ஊடகங்கள், சமூக வலைதளங்கள் ஆகியவை மக்களிடையே ஒற்றுமை மற்றும் நேர்மறை சூழலை உருவாக்கும் விதத்தில் செயல்பட வேண்டும்.

4. வர்த்தகர்களும், தொழிலதிபர்களும், தாராள மனம் படைத்தவர்களும் மக்களுக்கு உதவும் வகையில் நிதிஉதவி செய்வதற்கு முன்வரவேண்டும் மாதசம்பளம் வாங்குபவர்களும் தங்களது சம்பளத்தில் 2 முதல் 5 சதவிகிதம் வரை நன்கொடைகள் தருவதற்கு முன்வரவேண்டும்.

5. இவை எதுவும் செய்ய முடியாதவர்கள், இந்த மனித சமுதாயத்தின் நலனுக்காகவும் உடல் ஆரோக்கியத்திற்காகவும் ஆத்மார்த்தமாக இறைவனிடம் பிரார்த்தனைகள் செய்ய வேண்டும்.

கொரோனா வைரஸ் ஏழை பணக்காரன் என்று பாகுபாடு பார்க்கவில்லை அதிர்ஷ்டமிருந்தால் இந்த வைரஸ் பாதிப்பிற்குப் பிறகும் ஒருவர் முழு குணமடைய முடியும். மூன்றாம் உலகப் போர் போல் நம்மை சூழ்ந்திருக்கும் இந்த ஆபத்தை துணிச்சலுடன் எதிர்த்து சமாளிப்பதற்கு நாம் அனைவரும் நம்மால் முடிந்த உதவிகளை செய்வதற்கு நாமாகவே

முன்வருவோம். இந்த உலகம் இந்த கொடிய காலகட்டத்திலிருந்து மீண்டு, பாதுகாப்பாக வாழ்வதற்கு பிரார்த்தனைகள் செய்வோம். உங்கள் நலனுக்காக மனித குலத்தைக் காப்பதற்கு முன்வாருங்கள். இந்த உலகம் சந்தோஷமாகவும் ஆரோக்கியமானதாகவும் இருந்தால்தான் நாமும் அவ்வாறே இருக்க முடியும். எங்கேயோ யாருக்கோ நடக்கிறது என்று அக்கறையின்றி இருப்பது மாபெரும் தவறு. இந்த வைரஸ் நம் வீட்டுக் கதவையும் தட்டுவதற்கு வெகு நாழி யாகாது. சிந்தியுங்கள், மனிதம் காப்போம். தேசம் காப்போம்.

**தமிழாக்கம் : டாக்டர் ஷ்யாமா**

**நன்றி : அமிதாப் தோஷி**

*(இந்தக் கட்டுரை குஜராத்திலிருந்து வெளிவரும் செய்திதாளில் குஜராத்தியில் வெளிவந்துள்ளது)*


# தேதி மாற்றம் செய்யப்பட்டுள்ளது

உ
குருவே சரணம்

## வேதபாரதி

(பாரதப் பண்பாட்டு அமைப்பு)

## பூஜ்ய ஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகளின் "தர்மத்தின் குரல்" புத்தக வாசகர்கள் கேள்வி பதில் நிகழ்ச்சி

**முன்னிலை : ஸ்ரீ ரமண பாரதி அவர்கள்**

**நாள் :**
**தேதி பின்னர் அறிவிக்கப்படும்**
**காலை 10.00 மணி**
**முதல் 12.00 மணி வரை**

**இடம் :**
**ஸ்ரீ கணபதி**
**சச்சிதானந்தா ஆஸ்ரமம்**
பேபி நகர், வேளச்சேரி

**வேதபாரதி சிறப்பு கூட்டம்**

(2.00 மணி முதல் 5.30 மணி வரை)

- வேதபாரதி அன்பர்களின் குடும்ப நிகழ்ச்சி
- 2020 செயல்திட்டங்கள், மூத்த உறுப்பினர்களுக்கு மரியாதை செய்தல், பெண்களுக்கான விளையாட்டுகள், குழந்தைகள் நிகழ்ச்சி
- 5.45 மணிக்கு சாந்திமந்திரம்.

**மேலும் தொடர்புக்கு : 94434 95950**

# புதுவையில் மகளிர் தினம் 8.03.2020

*கடந்த மார்ச் 8, ஞாயிற்றுக்கிழமை, சர்வதேச மகளிர் தினம் ''சக்தி வேதபாரதி'' அங்கத்தினர்கள், புதுவை ''சங்கரா வித்யாலயா'' மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் வெகு சிறப்பாக கொண்டாடினர்.*

*பாரத தேசம் ஒவ்வொரு பொழுதினையும் மகளிருக்கான மகத்தான தினமாக போற்றி மகிழ்ந்தாலும், மார்ச் 8 சர்வதேச அளவில் கொண்டாடும் பொருட்டு, "சக்தி வேதபாரதி" ஒரு நிகழ்ச்சியை நடத்தியது. அழைப்பிதழ் வடிவம் முதல் வெற்றிக் களிப்பினை கொண்டாடும் யுக்தி வரை முழுக்க முழுக்க பெண்களே சுயமாக திட்டமிட்டு செயல்படுத்தினர். ஒட்டுமொத்த புதுவையையே சற்று திரும்பி பார்க்க செய்துவிட்டது இந்நிகழ்ச்சி என்றால், அது மிகையல்ல.*

*காலை 9.00 மணியளவில் தொடங்கிய விழா மதியம் சுமார் 2.00 மணியளவில் நிறைவுற்றது. சற்றும் இடைவெளியின்றி விழா நிகழ்ச்சிகள் நடந்தன.*

*இறைவணக்கம், வரவேற்பு உரை, தொடர்ந்து ஒவ்வொரு மகளிரும் தங்களை அறிமுகம் செய்து கொண்டனர். அறிமுகத்தில்தான் அவரவர்களின் மறுபக்கம் திறமைகளை எல்வோரும் புரிந்துகொள்ள முடிந்தது.*

*கவிதை, பாடல், மகளிர்தின சிறப்பு செய்தியுரை போன்றவற்றை சில பெண்கள் வெளிக்காட்டிய போது கம்பரும், ஔவையும் அவர்களுள் ஒளிந்திருந்ததை உணர முடிந்தது. ஒவ்வொருவரும் இதுபோன்ற ஒவ்வொரு தனித்திறமைகளை தன்னுள் இருந்ததை அங்கே காட்சிப் படுத்தினர்.*

*அனைத்து வயதினரும் கலந்து கொண்ட இவ்விழாவில் நூற்றுக்கும் மேற்பட்டோர் தங்கள் வருகையை பதிவு செய்து விழாவிற்கு வலு சேர்த்தனர். "கோ-கோ'', பாக்ஸ், கும்மி, "கோலாட்டம்'', "வளைபந்து'' போன்ற விளையாட்டுகளில் அந்நாளை அகமகிழ்வுடன் கழித்தனர். எல்லாவற்றிற்கும்*

முத்தாய்ப்பாக, நடனத்திற்கு அழைத்தபோது மிகவும் தயங்கியவர்கள், ஒருசிலர் மைதான மையத்திற்கு வந்ததும், 10 முதல் பத்தாவது 10 ஐ தொடும் 100 வயது வரையிலான அனைத்து பெண்களும் ஒருசேர ஆடிய “டான்ஸ்” ஆழ்மனதில் அதற்கான தருணத்தை எதிர்நோக்கி காத்திருந்ததை பட்டவர்த்தனமாக்கி காண்போரை பெரும் களிப்பூட்டியது.

குழந்தையாக பிறந்து, மகளாக வளர்ந்து, மருமகளாக அடுத்த வீட்டிற்கு நுழைந்து அடுத்த நொடிப்பொழுதிலிருந்து அவளின் ஒவ்வொரு நொடியையும், மனைவியாக, மருமகளாக, தாயாக, மாமியாராக பல பொறுப்புகளை ஏற்று அடுத்தவர்களுக்காகவே வாழும் அந்த தெய்வங்கள், அவர்களுக்கான அகமகிழ்வினை வெளிப்படுத்தி தங்களை ஆசுவாசப் படுத்திக்கொண்டனர், என்ற செய்தி நமக்கெல்லாம் பெரும்மகிழ்வை தருகின்ற விழாவாக இருந்தது. இவர்களுள் இத்தனை வடிவங்களா என காண்போரின் புருவத்தை உயர்த்திவிட்ட நிகழ்வு.

“சக்தி வேதபாரதி” அங்கத்தினர்களில் பலர் சுயதொழில் முனைவோர், அவர்களது அங்காடிகளும் விழாவில் திறந்திருந்தனர். இதன் மூலம், மற்ற பெண்களுக்கு தன்னம்பிக்கை பிறப்பதோடு அவர்களுக்கும், வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை பெருகுகிறது.

காலை முதல் விழாவின் முடிவுவரை சற்றும் இடைவெளி இல்லாமல் நடைபெற்ற நிகழ்ச்சிகள், பங்குகொண்டோரையும் பார்வையாளர்களையும் வெகுவாக கவர்ந்தது மட்டுமின்றி, விழா முடிகிறதே என ஏங்கவும் வைத்துவிட்டது. களைப்பை போக்கிக் கொள்ள, தேநீர், மோர் என மதிய சிறப்பான உணவுடன் நிறைவுற்ற இந்நிகழ்ச்சி மிகவும் நேர்த்தியாக திட்டமிட்டு செயல்படுத்தியவிதம் “சக்தி வேதபாரதி” இன்றி “வேதபாரதி” இல்லை. ஆம், சக்தி இல்லையேல் சிவம் இல்லை என்பதை உணர்த்தியது.

நன்றி நவிலலில் "சக்தி வேதபாரதி" ஜெனனத்திற்காக "வேதபாரதி" க்கு தனியிடம் கொடுத்திருந்தார் அதன் தலைவி ஸ்ரீமதி ஜெயஸ்ரீ வரதராஜன் அவர்கள். இவரது தலைமையில் ஸ்ரீமதி அபிராமி ரமேஷ், ஸ்ரீமதி பத்மாவதி பட்டாபிராமன், ஸ்ரீமதி சாவித்திரி வேதராமன், ஸ்ரீமதி சுசிலா நடராஜன், ஸ்ரீமதி மாலதி உள்ளிட்ட குழுவினர் இவ்விழாவினை சிறப்புற நடத்தி முடித்தனர்.



■ புதுச்சேரி கிழக்கு கடற்கரைச் சாலையில் உள்ள சங்கர வித்யாலயா மேல்நிலைப் பள்ளி வளாகத்தில், சக்தி வேதபாரத பண்பாட்டு அமைப்பு சார்பில், உலக மகளிர் தின விழா கொண்டாடப்பட்டது.

"வேதபாரதி" புதுவை கிளையின் தலைவர் திரு.ரமேஷ், துணைத் தலைவர் திரு.அட்வகேட் பட்டாபிராமன், செயலர் திரு.சந்திரசேகரன் ஆகியோர் வழக்கம்போல பக்கபலமாக இருக்க "சக்தி வேதபாரதியின்" முதல் விழாவை தனி முத்திரை பதித்துவிட்டது என்றால் மிகையல்ல.

**"நீரின்றி அமையாது உலகு", அப்படியே...**
**பெண்ணின்றி அமையாது சமூகம்"**

**ஆதிரையன்.**

வேதபாரதியின் நோக்கம் :

பெண் குழந்தைகளுக்கு யுவஸ்ரீ வாழ்வியல் பயிலரங்கம், அந்தணச் சிறுவர்களுக்கு சந்தியா வந்தன பயிற்சி, நன்னெறி வகுப்புகள், ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், திருப்பாவை, திருவெம்பாவை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

# ராஜலட்சுமி கல்யாண மண்டபம்

*வேளச்சேரி மெயின் ரோடு, தண்டீஸ்வரம்,*
*சென்னை - 600 042.*




- *800 பேர் அமர்ந்து ஆசிர்வதிக்க ஏ/சி ஹால்.*
- *சகல வசதிகளுடன் கூடிய மணமகன், மணமகள் அறைகள்.*
- *உறவினர்கள் தங்க - குளிரூட்டப்பட்ட அறைகள்.*
- *விசாலமான கார் பார்க்கிங்.*
- *வெகு அருகில் சிவன், பெருமாள் ஆலயங்கள்.*
- *நகருக்கு மத்தியில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற மண்டபம்.*
- *24 மணி நேரமும தண்ணீர் & மாடுலர் கிச்சன் வசதி.*

தொடர்புக்கு

## *48625585 / 9840545585*




## ஆக்ஞா
### மனநல ஆலோசனை மையம்

**நாங்கள் வழங்கும் சேவைகள் :**

- *பள்ளி மாணவர்களுக்கு, கல்வியாளர்களுக்கு குடும்ப உறவுகளுக்கு, நிறுவனங்களுக்கு, ஆலோசனை வழங்குதல்*
- *பள்ளி கல்லூரி மாணவர்களுக்கு வழிகாட்டுதல்*
- *பயமின்றி தேர்வு எழுத பயிற்சி வழங்குதல்*
- *சரியான துறையை தேர்ந்தெடுத்தல் போன்றவற்றிற்கு வழி காட்டுதல்*
- *குடும்ப உறவுகள் மேம்பட தனித்தனியாக மனநல ஆலோசனை வழங்கப்படும். மென்பொருள் நிறுவனங்கள் கார்ப்பரேட் நிறுவனங்களில் பணி புரிபவர்களுக்கு மன உளைச்சல் நீங்க, பணி மேம்பட, மன அழுத்தம் குறைய பயிற்சி அளிக்கப்படும். ஆலோசனை வழங்கப்படும்.*

**நேரம் : மாலை 6.30 மணி முதல் 9.30 மணி வரை**
**முன்பதிவு அவசியம் : 94448 08799**

# OONJAL UTSHAVAM - 01.03.2020 @ KADAIYUR

**Hare Srinivasa.**

Tirumala Tirupati Devasthanams, Dasa Sahitya Project, Tirupati, aims at bringing out the renowned culture to the gates of all community of all cultures throughout India and abroad. Music is the miraculous medium which connects Human beings for better living. This medium, coupled with devotion to the almighty as has been constantly preached by our Saint musicians of the past. Sri Purandaradasa, the Sangeetha Pithamaha, and his lineage of Saint poet's,along with a lineage of poet's like Sri Thalapakam Annamacharya, Sri Thiruvalluvar, poetess Avaiyar, and Alwars Divya prabandam, and Many more, who have sung hymn's in praise of the Morals to community.



The lyrics of these poet's has the Central Meaning of Social, Moral, Metaphysical and Spiritual embedded in them..To reach out to the Tamil speaking public, our Special Officer, Sri Anandatheerthachar Pagadal, aims at spreading the TTD Dasa Sahitya Project s, objectives to society through the different Sevas to Lord. Unjal Seva, to Lord SRINIVASA and his consorts,with Thirumanjanam was a treat to all VEDABHARATHI, an organisation with a motto of spreading spiritual Knowledge, Moral science and Bhakthi to children reached out to Sri Vivekananda Academy Senior Secondary School at Kangeyam.

The Unjal Seva was well coordinated by Sri R Venkataraman, secretary of VEDABHARATHI, and Sri Kumararaja, secretary of temple's federation along with us at TTD and the school. The Founder

of VEDABHARATHI, Sri T R Ramanathan graced the occasion to receive the blessings of Lord of the Seven Hill's. The Founder Chairman, Sri Sridhar, and Chairman, Sri Ramachandran, Sri Subramanian and Sri Tamizh, trustee of the school, along with the Principal, Staff, students and ardent devotee's participated and conducted the Seva in a good manner. The students did Seva to Lord through Nardana Seva and Bhajans in front of Lord. We aim at reaching many schools and colleges to reach the essence of bhakthi through this medium of Music in different languages.



Ever in the service of Lord,
**Mrs SHANTHI SARVOTHAMAN,** Coordinator,
Tamil Nadu, TTD Dasa Sahitya Project Tirupati.

உ
ஸ்ரீ குருப்யோ நம:

# வேதபாரதி

எண்.31, சேஷாத்திரிபுரம் 1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, செனனை - 600 042. செல் : 944424 95950


## ஸந்த்யா வந்தன பயிலரங்கம்

**நாள் : 1, 2, 3 மே 2020 வெள்ளி, சனி, ஞாயிறு**
**இடம் : பாண்டிச்சேரி**

**விபரங்களுக்கு :**
திரு.NJL. ரமேஷ் - 73975 46333
திரு.C. பட்டாபிராமன் - 98426 07476
திரு.R. சந்திரசேகரன் - 94432 84439
திரு.K. சங்கர் - 86674 16781
திரு.K. ராமகிருஷ்ணன் - 99949 26537

இவண்
**செயலாளர்**
வேதபாரதி தமிழ்நாடு
94434 95950

**Email : vedabharathichennai@gmail.com**



MULTI-PURPOSE SURFACE CLEANSER
NSF
• Dilution Ratio – 1:100
• Highly Concentrated
• Safer to skin
VESSEL CLEANSER
Cost/Utensil = 0.45 Paise/vessel (<1Paise/Utensil)
CARBON CLEANSER
DISINFECTANT CLEANSER
Approved by Intertek
WOPPER®
Fluid Chemistry
Paint & Printing ink
Leather
Rubber
Automobile
Construction & Hardware
Textile
Agriculture
Domestic
Food & Hospitality
Detergents
WOPPER
Celebrate productivity & cleanliness
Textile | Leather | Rubber | Construction & Hardware | Agriculture
Paint & Printing Inks | Domestic | Food & Hospitality | Detergents
INDIA | UAE | SINGAPORE | QATAR | SRI LANKA
DE-SCALER
WATER TANK CLEANSER
• 100% organic & safe for lungs
• Free from Chlorine
OVEN & GRILL CLEANSER
• Less maintenance cost
• Maintains aesthetics & performance of machines
URINAL CLEANSER
• Dissolves uric acid salt buildup.
• Eliminates rust deposits.
• Preserve environmental hygiene.
• Reduces maintenance cost.
• Competitive cost.

# இன்றைய தலைமுறைக்கு வேதபாரதி...

இளம் தலைமுறையினரிடம் பண்பாடு, கல்வி போன்றவற்றை ஊக்கப்படுத்த, பல அமைப்புகள் சேவையாற்றுகின்றன. ஆனால், பண்பாடு என்பது நமது நடை, உடை, பேச்சு, பழக்க வழக்கங்கள், குடும்ப உறவுகள் என எல்லாவற்றிலும் பிரதிப்பலிக்க வேண்டும் என்பதை கவனத்தில் கொண்டு திட்டமிடுகிறது வேதபாரதி.

சமய கோட்ப்பாடுகளில் உள்ள சந்தேகங்களுக்கு விளக்கம் அளித்து இளம் தலைமுறையினரிடையே நம்பிக்கை ஏற்படுத்தும் அதே வேளையில், சமூக சிந்தனையோடு வாழவும் கற்றுத்தருகிறது வேதபாரதி.

யுவஸ்ரீ நிகழ்ச்சிகள் மூலம் இளம்பெண்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், தம்பதிகளிடையே தர்ம சிந்தனையோடு வாழ்க்கை நடத்தவும் வழிகாட்டுகிறது.

தற்காலத்தில் உபநயனம் என்பது ஒரு சடங்காக முடிந்துவிடுகிறது. இதனை மாற்றி, உபநயனம் முடித்தவர்களுக்கு, அதற்குரிய பயிற்சியை வேதபாரதி அளிப்பதன் மூலம் அடுத்தத்தலைமுறை தங்களது நித்ய கர்மானுஷ்டங்களை பின்பற்ற வழிகாட்டுகிறது.

**மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்**
**பிறப்பொழுக்கங் குன்றக் கெடும். (குறள் 14:134)**

வேதத்தை பிராமணர்கள் மறந்தாலும் பரவாயில்லை, பிறகு கற்றுக்கொள்ளலாம். உபநயனம் எனும் பிறப்பால் வரும் கடமையாகிய (ஒழுக்கம் = கடைப்பிடித்தல்) சந்த்யாவந்தனத்தை விட்டால், அக்குலம் அதன் சிறப்பை இழந்துவிடும். இதனை பயிற்சியின் மூலம் கற்றுத்தந்து, கடைப்பிடிக்க வைக்கும் வேதபாரதியை எத்தனை பாராட்டினாலும் தகும். ஔவை முதலான மகான்கள் அருளிய தமிழ் செய்யுள்களில் போட்டிகள் நடத்திய அறச் சிந்தனையை பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு ஏற்படுத்தி வருகிறது.

வேதபாரதி மேன்மேலும் வளர, ஒவ்வொருவரும் இந்த அமைப்போடு இணைந்து செயலாற்றுவோம். நற்செயலுக்கு நல்லோர் ஒத்துழைப்பு அவசியம்.

அன்புடன் **பசுத்தாய் கணேசன்.**

**G. SIVAGAMASUNDARI**
**99940 89133**



**N. GURUMURTHY**
**99940 89140**

# SRI SASTHA CATERING



*We are Supplying Meals,*
*Tiffin & Marriage Sear*
*Variation in Order*



**14-C, Sitravasu Street, Macmillan Nagar, Nanganallur, Chennai.**

# திருக்கோயில் உழவாரப்பணி மன்றம்

*14, பாலசுப்ரமணியர் கோயில் தெரு,*
*லட்சுமி நகர், வேளச்சேரி, சென்னை - 600 042.*

செல்: **9445121080, 7200935145**

திருகோவில் உழவாரப்பணி மன்றம் சென்னை வேளச்சேரியில் சிவத்திரு ஆடலரசு ஐயா அவர்கள் தலைமையில் எல்லாம் வல்ல சிவபெருமான் அருளால் சிவனடியார்கள் பல ஆண்டுகளாக உழவாரப்பணி செய்து வருகிறார்கள். கடந்த 9 ஆண்டுகளாக 46 ஆலயங்களில் இனம், மதம், மொழி வேறுபாடின்றி அனைவருக்கும் பசிப்பிணி போக்கும் அன்னதானப் பணியை தொடர்ந்து செய்து வருகிறார்கள். குறிப்பாக பாண்டிச்சேரி அரியாங்குப்பம் சமையல் கூடத்தில் சமையல் செய்து சுற்றி உள்ள 14 கிராமங்களில் உள்ள திருக்கோவில்களில் மதியம் அன்னதானம் வழங்குகிறார்கள். இச்சிறந்த பணிக்காக தங்களை அர்ப்பணித்து செயலாற்றும் அடியார் பெருமக்கள், பொருள் உதவி, பண உதவி செய்யும் நல் உள்ளங்கள் ஆரோக்யமாக வாழ்ந்து இப்பணி தொடர்ந்து நடைபெற வேதபாரதி வாழ்த்துகிறது. எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் நலமுடன் வாழ ப்ரார்த்தனை செய்கிறோம்.

உழவாரப்பணி அன்னதான குழு
போன் : 9445121080 / 7200935145

அன்புடன் : செயலாளர்
வேதபாரதி

AGNI SAMSKARAM

# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

G-2, Vijay Builders, Plot No.24, Kandaswamy Nagar, 9th Cross Street,
Palavakkam, Chennai - 600 041, India.
Mobile : 98407 44400, 98402 43592, 98400 45776
Email : sreedhar.apkt@gmail.com Website : www.dharmaa.org



## ஸ்ரீ காஞ்சி
## மஹா ஸ்வாமிகளின் அருளுரை
## தெய்வத்தின் குரல் 3ம் பாகம்
## அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம்
## இது தான் அச்வமேதம்

*இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்*

### அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்ம
### அச்வமேத பலம் லபேத்

*என்பது சாஸ்த்ர வசனம்*

*பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.*

### இந்த அறக்கட்டளையின் நோக்கம்

1. *அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்*
2. *கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.*
3. *நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.*
4. *மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்*

Contributions can be sent to :
A/c Name : Anatha Pretha Kainkarya Trust
Bank Name : Canara Bank, T.Nagar Branch
A/c No : 0917101048526 / IFSC Code : CNRB0000917
K. JAYARAMAN, Trustee / Treasurer
No.3, Mullai Street, Balaji Nagar, Adambakkam, Chennai - 600 088.
Cell : 9840045776 / Email : jayaraman2212@gmail.com

# இமைப் பொழுதில்
# கண் முன்
# உங்கள் கிரெடிட் கார்டு

**சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி கிரெடிட் கார்டு**




சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி ஆன்லைன் டைட்டானியம் கிரெடிட் கார்டு. வங்கியில் வைப்புக் கணக்கு (Fixed Deposit) வைத்துள்ள அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இந்த கிரெடிட் கார்டு முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது.

சிட்டி யூனியன் பேங்கின் வாடிக்கையாளர்கள் இந்த கிரெடிட் கார்டினை பெற CUB நெட் பேங்கிங் மூலம் எளிமையான முறையில் உடனடியாக விண்ணப்பிக்கலாம். நீங்கள் விண்ணப்பித்தவுடன் உங்கள் கம்யூட்டர் திரையில் Virtual Credit Card தோன்றும். இதனை உடனடியாக உபயோகப்படுத்தி ஆன்லைனில் ஷாப்பிங் மற்றும் டிக்கட் புக்கிங், பணம் செலுத்துதல் ஆகிய தேவைகளைப் பூர்த்தி செய்யலாம்.

உங்கள் பிளாஸ்டிக் கிரெடிட் கார்டு விரைவிலேயே உங்கள் இல்லத்தையோ / அலுவலகத்தையோ வந்தடையும்.

CUB
TRUST AND EXCELLENCE
SINCE 1904

## சிட்டி யூனியன் பேங்க்

www.cityunionbank.com ராசியான பேங்க், ஈஸியான பேங்க்

For assistance, Call our 24x7 Customer Care at 044-7122 5000, Mobile : 7299075077 / 7299075078

Keep your bank account details, passwords, ATM PIN, OTP etc. safe. Do not share with anyone.

REGD No. : TN/CC(S)DN/571/18-20 RNI No : TNTAM/2016/73726
TN/PM G (CCR) / WPP 605/19-20 / Valid from 28.02.2019 to 31.12.2020
Published 1-7th (1st Week) Every Month




தரமான நகைகளுக்கு
சரியான முகவரி....

சூர்யா ஜுவல்லர்ஸ்® A/c

287,288, புளியமரச்சந்து, ஈஸ்வரன் கோவில் வீதி, திருப்பூர் - 4. போன்: 0421 2241829

78, ஈஸ்வரன் கோயில் வீதி, குலாலர் பிள்ளையார் கோயில் எதிரில், திருப்பூர். போன் : 0421 2241827

சூர்யா எலக்ட்ரிக்கல்ஸ்

7(2), புளியமரத்தோட்டம், மங்கலம் ரோடு, திருப்பூர் 4.
போன்: 0421 2241826

To | Printed Matter

If not delivered please return to
**VEDABHARATHI**
No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.